விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 20 ஸபர் 19 இதழ் 296

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6—12—82

## "எனது கணவர் ராணுவத்தினரால் விசாரணை செய்யப்பட்டார்"

### 'தேவன்' மரணவிசாரணையில் மனைவி

(மாவிட்டபுரம்)

''தேவன், தேவன் என்று எனது கணவரை யாரோ வீட்டுக்கு வெளியிலிருந்து அழைக்கும் சத்தம் கேட்டது. அவர்களுடன் சென்றவர் இரவு முழுவதும் வீடு திரும்பவில்லை அவரது சடலம் குளத்தடியில் காணப்படுவதாக சில பாடசாலை மாணவர்கள் மூலமாக காலையில் அறிந்துகொண்டேன்''

இவ்வாறு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த க. வேலாயுதம் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில் இறந்தவரின் மனைவி திருமதி ஸ்ரீதேவி வேலாயுதம் சட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் மரணவிசாரணை நடத்தினார். தமது சாட்சியத்தில் அவர் மேலும் கூறியதாவது:

''சம்பவம் நடைபெற்ற தினமான இம்மாதம் இரண்டாம் திகதி வீட்டில் நானும் கணவரும் எங்களது ஒன்றரை வயது குழந்தையும் இருந்தோம். இரவு சுமார் ஏழரை மணியளவில் "தேவன் தேவன்'' என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. கணவர் வெளியே சென்று பார்த்தார். நான் கர்ப்பணியாக இருந்ததால் வெளியே போய்ப் பார்க்கவில்லை. வெளியில் சென்ற கணவர் திரும்பி வந்து, ஷேர்ட்டை அணிந்து கொண்டு சிறிது நேரத்தில் திரும்புவதாக என்னிடம்கூறிச் சென்றார்.

[8-ம் பக்கம் பார்க்க]

# பேராதனைப் பல்கலைக்கழகம்

# மூடப்பட்டது!

## மாணவர்கள் கைகலப்பு விடுதிகள் சேதம்!

### கண்டி ஆஸ்பத்திரியில் 5 மாணவர் அனுமதி

(பேராதனை)

**பேராதனை பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுளளது.**

**பல்கலைக்கழக மாணவர் அவைத் தேர்தலைத் தொடர்ந்து இரு பிரிவு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பின் எதிரொலியாக சில மாணவர் விடுதிகள் சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.**

**கைகலப்பில் பலத்த காயமடைந்த ஐந்து மாணவர்கள் கண்டி அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

பேராதனை பல்கலைக்கழக மாணவர் அவைத் தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இத்தேர்தலில் வெற்றி பெற்ற குழுவினர் கோஷமிட்டுக்கொண்டு ஊர்வலமாக வந்துகொண்டிருந்தபோது தோல்வி பெற்ற குழுவினரும் எதிர்த்திசையில் ஊர்வலமாக கோஷமிட்டவண்ணம் வந்துகொண்டிருந்தனர்.

இரு ஊர்வலங்களும் ஒரு இடத்தில் சந்தித்தபோது கைகலப்பு மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைகளு்ம் கற்களும் தாராளமாக பரிமாறப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து கைகலப்பும் கடந்த வெள்ளிக்கிழமை நடந்து நேற்று முன்தினமும் நீடித்தது

பல்கலைக்கழக வளவில் பதட்டநிலை உருவானது.

நேற்று மாணவர்களின் சில விடுதிகள் சேதப்படுத்தப்பட்டன கண்ணாடி யன்னல்கள் நொருக்கப்பட்டன.

பொலிஸார் வரவழைக்கப்பட்டு பல்கலைக்கழக வளவில் காவல்புரிந்தனர்.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தை காவரையறையின்றி மூடுவது என்றும் பேரா

[8-ம் பக்கம் பார்க்க)

பாடசாலையில் பரீட்சை எழுதிய

## 3 மாணவிகளைக் காணவில்லை!

(இரா. உதயகுமார்)

பாடசாலை சென்று பரீட்சை எழுதிய மூன்று மாணவிகளைக் காணவில்லையென்று பொலிஸ் நிலையத்தில் புகார்செய்யப்பட்டுள்ளது!

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையைச்சேர்ந்த சி உதயராணி(14வயது)சி. விஜயராணி 9 வயது) பொ. சந்திராதேவி 14 வயது ஆகிய மூவருமே காணாமற்போனவர்கள் என்று முறையிடப்பட்டுள்ளது

இம் மூன்று மாணவிகளும் மட்டக்களப்பு புதூர் திமிலதீவைச்சேர்ந்தவர்கள்.

மாணவிகளின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் நேற்று ...கல்செய்தபுகாரில்; கடந்த சனிக்கிழமை பரீட்சைஎழுத இம்மாணவிகள் பாடசாலை சென்றிருந்தனர் என்றும் பின்னர் அவர்கள் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்

உதயராணியும், சந்திரா தேவியும் எட்டாம் வகுப்பில் கல்வி பயில்கின்றனர். விஜயராணி மூன்றும்வகுப்பில் கல்வி பயில்கின்றார் சனிக்கிழமை இம்மூவரும் பாடசாலைசென்று பரீட்சை எழுதியிருந்தனர்என்றும்; பாடசாலை விட்டுச் சென்றதை சிலமாணவிகள் அவதானி தனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று மாலைவரை இம் மூன்று மாணவிகளும் வீடு திரும்பவில்லை.

திருநெல்வேலி

## அம்மன் ஆலய முன்றலில் உண்ணாவிரதம்

### பெண்கள் அதிகமாக கலந்துகொண்டனர்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறும், மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகளை விடுதலை செய்யுமாறும், வடபகுதியிலிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெறுமாறும் கோரி திருநெல்வேலி அரசடி அம்மன் ஆலய முன்றலில் ஆயிரக்கணக்கானோர் கறுத்தப் பட்டி அணிந்து சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் உண்ணாவிரதம் இருந்தனர்.

உண்ணாவிரதத்தில், ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா 1977ல் ஜூலை மாதம் பிரதமராக வந்தபின்னர் 21-10-77ல் பாராளுமன்றத்தில் குற்றவியல் ஆணைக்குழுச் சட்டம் பிழையானது என வாதித்து ரத்துச்செய்யுமாறு நிகழ்த்திய ஹன்சார்ட் அறிக்கை (நிரல் 1866) துண்டுப் பிரசுரமாக விநியோகிக்கப்பட்டது.

குற்றவியல் ஆணைக்குழுச் சட்டம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நீண்ட துண்டுப் பிரசுரத்தை, இளைஞர்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்கும் போராடும் 32 அமைப்புகள் ஒன்று சேர்ந்து அச்சிட்டு வெளியிட்டன.

பயங்கரவாத தடைச் சட்டத்தால் ஏற்படும் தீமைகள் குறித்தும் இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்ணாவிரதத்தை, ஆடியபாதம் பங்குத்தந்தை வண. பிதா ஜே ஈ. ஜெகதீசன் நேற்றுக்காலை 8 மணிக்குஆரம்பித்துவைத்தார். யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உபதலைவர் சட்டத்தரணி எஸ் நாகராசா, யாழ். பிரதேச சபைத்தலைவர் திரு. எஸ். ரி. தியாகராசாஉட்படபல அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். பெண்களே அதிகமாகக் கலந்துகொண்டனர். இந்து – கிறிஸ்தவ–இஸ்லாமிய பக்திப் பஜனைக் கீதங்களை அமைதியாகப் பாடிக்கொண்டிருந்தனர்.

பிற்பகல் 5 மணிக்கு ஓய்வு பெற்ற நீதிபதி ரி. தம்பித்துரை பசுப்பால் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். [மா]

மதகுருமாரை விடுவிக்கக் கோரி

## முஸ்லிம்கள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ மதகுருமாரை விடுதலை செய்ய வேண்டுமென்றும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டுமென்றும் கோரி, யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் நேற்றுப பகல் உண்ணாவிரதமிருந்தனர்

உண்ணாவிரதத்தில் இந்து, கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்

யாழ் ஜின்னாமைதானத்துக்கும், சின்னப்பள்ளிவாசலுக்கும் இடையேயுள்ள மையவாடிக்கு முன்பாக உண்ணாவிரதம் நடைபெற்றது. யாழ. மாநகராட்சிமன்ற முஸ்லிம் வட்டார உறுப்பினர் ஜனாப் பாஷா முகைதீன்பிச்சையின் இஸ்லாமிய பிரார்த்தனையுடன் நேற்றுக்காலை 7 மணிக்குஆரம்பமானது

யாழ் மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன், யாழ். மாநகராட்சி மன்ற உறுப்பினர் ஜனாப் சாகுல் ஹமீட், ஜனாப் எஸ். எம் சுல்தான், சட்டத்தரணி ஜனாப் ஆர். எம். இமாம், ஜனாப் எம் எல். கலீல் மற்றும் ஆசிரியர்கள், மௌலவிகள், வர்த்தகர்களும், நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுமாக ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கிறிஸ்தவ பெண்களும் அதிகமாக காணப்பட்டனர்.

இடையிடையே இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து பக்திப் பாடல்கள் ஒலிக்கப்பட்டபோதும் உண்ணாவிரதமிருந்தவர்கள் மௌனமாகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர்

பின்வரும் சுலோக அட்டைகளும் காணப்பட்டன.

''மதகுருமாரை விடுதலை செய், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு''

''மதத்தின்மீது கைவைக்காதே மதகுருமாரை விடுதலை செய்''

,'சிலுவை தாங்கிய கரங்களுக்கு விலங்குகள்தான் உன் பரிசோ''

சின்னப்பள்ளி வாசலில் தொழுகை நடைபெற்றதைத் தொடர்ந்து யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குளிர்பானம் வழங்கி 3மணிக்கு உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். [மா]

மல்லாகம் பகுதியில்

## ஊர்வலமாக வந்து உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

மதகுருமாரை விடுதலைசெய்யுமாறும், பயங்கரவாததடைச் சட்டத்தை உடனடியாகநீக்குமாறும் கோரி மல்லாகம் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கிறிஸ்தவ–இந்துமக்கள் நேற்றுக்காலை கறுத்தப்பட்டி அணிந்து, சுலோக அட்டைகளைத் தாங்கி பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டு காங்கேசன்துறை பிரதானவீதி வழியாக ஊர்வலமாக வந்து, மல்லாகம் பிள்ளையார் கோவிலில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 8 மணிக்கு மல்லாகம் சதாசகாயமாதா கோவிலில் ஆராதனை நட

(8- ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சுண்ணாகத்தில் மருந்தகம் (Pharmacy) போட உடனடியாக இடம்தேவை. தொடர்பு கொள்ள:- மு. கா. சகாதேவன், இல 54, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 5380

சைவக் கடைக்கு அப்பம் போடுவதற்கு ஆள் உடனடியாகத் தேவை. அனுபவம் அவசியம். விபரங்கட்கு: நேரில் தொடர்புகொள்ளவும். நிர்வாகி, செல்வ விலாஸ், 181, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5382

கைத்தறியில் நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11. பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (5299)

### வாடகைக்கு

மாணவிகளுக்கும், காரியாலயத்தில் வேலை செய்யும் பெண்களுக்கும் இட வசதி உண்டு. விபரங்களுக்கு:- திருமதி P. வீரசிங்கம், இல. 5, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். 5387

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதிக்கு அருகாமையில் சகல வியாபாரங்கட்கும் உகந்த இடவசதி நீண்ட கால வாடகைக்கு உடனடியாக உண்டு. தொடர்பு கொள்ளல்; மு.கா. சகாதேவன் 54, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 5381

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் ஒழுங்கை, 1-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தெல்லிப்பளை ஜெயரட்ணம் இராஜரட்ணம் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

– மரணமெய்தியவர்

தெல்லிப்பளை ஜெயரட்ணம் இராஜரட்ணம் மகள் பெண் அருள் இராசமலர் இராஜரட்ணம், இல: 1, சோமசுந்தரம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

– மனுதார்

வழ. இல:ரி / 3701

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம்ஆண்டுமார்கழி மாதம் 17-ந் திகதி முற்பகல் 9½மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

தா. குலஞானம்,
(ஒப்பம்)
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி

5366

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வரவு செலவுத் திட்டம் - 1983

1983-ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேசச் செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 1982ஆம் ஆண்டு மார்கழி மாதம் 08-ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 212 (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இராசா விசுவநாதன்,
முதல்வர்,
யாழ்ப்பாண மாநகரசபை

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2-12-1982. 5386

---

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்வரும் வகையான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம்கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 20-12-1982ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகவிண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப் பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும், விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா 2/- ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ அன்றேல் தபால் காசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பி வைத்தால் கேள்வி விண்ணப்பப்பத்திரம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### வெற்றுச் சாக்கு விபரம்

| | | |
|---|---|---|
| 01. | மா | — 821 |
| 02. | சீனி | — 764 |
| 03. | நவதானியம் | — 752 |
| 04. | அரிசி நம்பர்2 | — 1072 |
| 05. | சர்க்கரை | — 121 |
| 06. | அரிசி 1அந்தர் | — 140 |
| 07. | இழக்கம் | — 200 |
| 08. | பை | — 60 |
| 09. | கழிவு | — 105 |
| | | 4035 |

சோ. அருணகிரி,
பொதுமுகாமையாளர்,

புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
1982-12-03. 5376

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

கல்வித்துறையில் பயிற்சி:

# அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மாவிட்டபுரம்)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வித்துறையில் பயிற்சிபெற விரும்பும் அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து கல்வியமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கல்வி நிர்வாகம், திட்டமிடுதல் போன்ற துறைகளில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சியளிப்பதன் மூலம் சிறந்த கல்விமான்களை உருவாக்க கல்வியமைச்சு திட்டமிட்டு அதிபர்கள், ஆசியர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் பயிற்சிற்கு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் எனதெரிவிக்கப்படுகிறது.

---

## 'கிராம வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும்'

மாவிட்டபுரம்)

"கிராமமட்டத்தில் மக்கள் பல்வேறு சங்கங்களை அமைத்து அவற்றின் கீழ் ஒற்றுமையாகவும், கட்டுக் கோப்புடனும் செயல்பட்டு கிராம வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும். கிராமத்தின் மறு மலர்ச்சிக்கு இவ்வாறன சங்கங்கள் அவசியமானவை."

இவ்வாறு வசாவிளான்செல்லையேம்ஸ் சனசமூகநிலைய புனரமைப்புக் கூட்டம் வசாவிளானில் நடந்த சமயம் அதற்கு தலைமை தாங்கிப் பேசிய யாழ் அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. என். இராசேந்திரம் கூறினார்.

சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட கிராமசேவை அலுவலர் திரு யோ. அருளானந்தம் பேசுகையில்-: "கிராமமக்கள் பொது சன சேவையில் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்றார்.

சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் வருமாறு-:

போஷகர்கள் திரு என். இராசேந்திரம் (யா மா. ச. உறுப்பினர்) வண பிதா. சூசைப்பிள்ளை (பங்குக்குரு) அருட் திரு. மா. இராசேந்திரன். தலைவர் திரு. யோ. அருளானந்தம் [கிராமசேவை அலுவலர்], உபதலைவர் திரு. பற்றிக் பெர்ணாண்டஸ், செயலாளர்: திரு. இ. சவுந்தரநாயகம் உபசெயலாளர்: திரு. ச. டேவிட், தனாதிகாரி: திரு. ஜே ா. யோமஸ்.

7 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது.

---

## இன்று நடைபெறும்

# எழுத்தாளர்-பத்திரிகையாளர் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கொண்ட மகாநாடொன்றை இன்று கூட்டவுள்ளது.

1982ம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் செயல்படுத்திய வேலைத்திட்டங்கள், ஏனைய நடவடிக்கைகள் பற்றிய கருத்துரைகளைக் கொடுக்கும் வகையில் இந்த மகாநாடு கூட்டப்படுவதாக தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் இளைஞர் சேவை மன்ற பிரதிநிதிகள் இவ்வாண்டு செயல் திட்டங்கள் பற்றியும், இளைஞர்கள் நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றுவர். (வண்-நிரு)

---

## இலவச பாடப் புத்தகம்

(கரவெட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதற்கென கல்விச் சேவைகள் அமைச்சு 45 ஆயிரம் பாடப் புத்தகங்களை அனுப்பி வைத்துள்ளது.

இரண்டு லொறிவண்டிகளில் வந்து சேர்ந்துள்ள இப் பாடப் புத்தகங்களை பங்கிட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் மேற்கொண்டு வருகிறார்.

---

## சான்றிதழ் விருது வழங்கும் வைபவம்

(மாவிட்டபுரம்)

வடமாநில கல்வித்திணைக்களத்தால் வடமாநில பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இம மாதம் 7ம், 8ம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

7ம் திகதி பிரதம கல்வி அதிகாரி திரு. மன்சூர் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். 8ம் திகதி வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

இதற்கான ஏற்பாடுகளை கல்வியதிகாரி செல்வி எஸ். ஆர் நவரத்தின சிங்கமும் யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரனும் மேற்கொண்டுள்ளனர்.

---

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 20ம் திகதி
திங்கட்கிழமை
(6—12—82)

மேடம்; கவர்ச்சிகரமான தினம். சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள், பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பொது மக்களின் மதிப்பும் கிட்டும்.

இடபம்: இதயப்படுதாவில் இனபத்தின் மின்னல் தோன்றும். தொழில் துறையில் வெற்றி காணப்படும். விருந்தினர் வருகையால் இல்லத்தில் இனிமை தவழும்

மிதுனம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும் மக்களின் பிரபல்யம் உங்கள் மகிழ்ச்சியை ஆழ்த்தும்

கடகம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றும். மனைவியின் உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். சுகாதாரம் வேண்டும்

சிங்கம்: கன்னியர் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்

கன்னி: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

துலாம்: சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று. சிலருக்கு நூதன ரோகம் ஏற்படலாம்.

விருச்சிகம்: தாய் வழியால் பெருமைகள் சேர்வதுடன் வாழ்வும்கிடைக்கும் எதிரிகள் கூட வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று சுமாரானதினம்.

தனு: தெளிந்த மனம் தெய்வசிந்தைதேடியதுகிடைக்கும். அமைதியுடன் வாழ்வு உண்டு. இறை நம்பிக்[illegible] டன் இல்லத்தில் அ[illegible]

[7-ம் பக்கம் ப[illegible]

---

### யா/செங்குந்த இந்துக்கல்லூரி
### திருநெல்வேலி

1983 ஆரும்தரத்தில் சேர விரும்புபவருக்குரிய பிரவேசப் பரீட்சை

ஞாயிற்றுக்கிழமை 12-12-1982 மு. ப. 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர்.

3-12-1982. (5372)

---

### லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி
### யாழ்ப்பாணம்

## பிரவேசம் - 1983

தகைமை:- க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் விஞ்ஞான பாடம் ஒன்று உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி. வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு மூன்று பாடங்களில் திறமைச் சித்தி.

விண்ணப்பங்கள் 17-12-1982 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

5379

# பத்தாவது 'ஆசியாட்' 86-ல் தெ.கொரியாவில்நடைபெறும்

புதுடில்லி, டிச 5

ஒன்பதாவது ஆசியாட் பந்தயங்களின் நிறைவு வைபவம் நேற்று புதுடில்லி 'ஜவஹர் லால்நேரு' விளையாட்டரங்கில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

சுமார் மூன்று மணித்தியாலங்கள்வரை நடைபெற்ற இவ் வைபவத்தில் ஜனாதிபதிஸெயில் சிங், பிரதமர் இந்திராகாந்தி ஆகியோர் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும், உயர் அதிகாரிகளும், விளையாட்டு ஏற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். 70,000க்கும் அதிகமான பார்வையாளர்கள் விளையாட்டரங்கினுள் நிறைந்திருந்தனர்.

## இறுதி அணிவகுப்பு

கண்ணைக்கவரும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிறைவுநாள் நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் ஆசியாட்'டில் பங்கேற்ற 33 நாடுகளும் தத்தமது நாடுகளின் பெயர் அட்டைகளை ஏந்திய பெண்களுக்குப் பின்னல் தமது தேசிய கொடிகளை ஏந்திய வண்ணம் விளையாட்டரங்கின்மைதானத்தில் அணிவகுத்து நின்றனர். இதனைத்தொடர்ந்து இந்திய இராணுவத்தினர் ஐந்துதடவைகள மரியாதைப் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் பின்னர் சம்பிரதாயபூர்வமாக ஆசியாட்' விளையாட்டுப்பந்தயஜோதி அணைக்கப்பட்டது.

## 10வது ஆசியாட்

ஒன்பதாவது 'ஆசியாட்' ஜோதி அணைக்கப்பட்டதையடுத்து பத்தாவது'ஆசியாட்' பந்தயங்கள் நடைபெறவிருக்கும் தென்கொரிய நாட்டின் தேசியகொடி ஏற்றிவைக்கப்பட்டது.

1986ம் ஆண்டு தென்கொரியாவின் தலைநகரான சியோலில் 10வது ஆசிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆசியாட்' பந்தய பிரமுகர்களில் ஒருவரான திரு. ராஜா பலேந்திராசிங் நன்றியுரை நிகழ்த்துகையில் ஒன்பதாவது 'ஆசியாட்'டை வெற்றிகரமாக நடத்த உதவிய சகலருக்கும் நன்றி தெரிவித்தார். இறுதியாக 1986ல் பத்தாவது ஆசியாட்டுக்கு சகலரையும்சியோல் நகருக்குவரும்படியும் அழைப்பு விடுத்தார்.

## இராணுவ சாகஸங்கள்

நேற்றைய நிறைவுநாள் வைபவங்களில் இந்திய இராணுவத்தினரின் நிகழ்ச்சிகளே முக்கியம் பெற்றிருந்தன.




ஜனாதிபதியின் மெய்க்காப்பாளர்களும், இந்திய இராணுவ 61வது குதிரைப்படையினரும் சுமார் அரைமணி நேரத்துக்கு மைதானத்தில் குதிரைகளைக் கொண்டு பல்வேறு வடிவங்களிலும் வியூகங்களைஅமைத்து சாகாஸங்களைப் புரிந்தனர் கடைசியாக ஒன்பதாவது 'ஆசியாட்' சின்னத்தின் வடிவில் பெரும் வியூகமொன்றை அமைத்து தமது நிகழ்ச்சிகளை நிறைவுசெய்தனர்.

இராணுவ 'பாண்ட்' வாத்தியக் கோஷ்டியினரும் இந்நிகழ்ச்சிகளுக்கு பின்னணி இசைவழங்கி பார்வையாளர்களை குதூகலிக்கச் செய்தனர். இறுதியாக மாலை ஐந்தரை மணியளவில் 'ஆசியாட்'சின்னமான 'அப்பு' என்ற யானைக்குட்டியை விளையாட்டு விபரங்களை அறிவிக்கும் ஸ்ரேடியத்தின் பிரதான பெரும் டெலிவிஷனில் தோன்றச்செய்து படிப்படியாக அச்சின்னம் மறையச் செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து தேசிய கீதத்துடன் ஆசியாட் விளையாட்டரங்கு கலையத் தொடங்கியது. (கி)

# 9-வது ஆசியாட் பதக்கங்கள் அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சீனு | — 61 | — 51 | — 41 |
| ஜப்பான் | — 57 | — 52 | — 43 |
| தெ. கொரியா | — 28 | — 28 | — 37 |
| வ. கொரியா | — 17 | — 19 | — 21 |
| இந்தியா | — 13 | — 19 | — 25 |
| இந்தோனேஷியா | — 4 | — 4 | — 7 |
| ஈரான் | — 4 | — 4 | — 4 |
| பாகிஸ்தான் | — 3 | — 3 | — 5 |
| மங்கோலியா | — 3 | — 3 | — 1 |
| பிலிப்பைன்ஸ் | — 2 | — 3 | — 9 |
| ஈராக் | — 2 | — 3 | — 4 |
| தாய்லாந்து | — 1 | — 5 | — 4 |
| குவைத் | — 1 | — 3 | — 3 |
| சிரியா | — 1 | — 1 | — 1 |
| மலேஷியா | — 1 | — 0 | — 3 |
| சிங்கபூர் | — 1 | — 0 | — 2 |
| லெபனுன் | — 0 | — 1 | — 0 |
| பாஹ்ரெய்ன் | — 0 | — 0 | — 1 |
| ஹொங்கொங் | — 0 | — 0 | — 1 |
| வியட்னும் | — 0 | — 0 | — 1 |
| கட்டார் | — 0 | — 0 | — 1 |
| சவுதிஅரேபியா | — 0 | — 0 | — 1 |

[கி]

# ஆசிய விளையாட்டுக்கள் இந்தியாஒருபடி முன்னேற்றம்

புதுடில்லி டிச 5

எட்டாவது ஆசியாட் பந்தயங்களில் பெற்ற வெற்றிகளை விட இந்தியா ஒன்பதாவது ஆசியாட்டில் ஒருபடி முன்னேறியுள்ளது.

பாங்கொக்கில் நடைபெற்ற எட்டாவது 'ஆசியாட்' போட்டிகளில் இந்தியா 28 பதக்கங்களையே பெற்று பதக்கப்பட்டியலில் ஆருவது இடத்தை வகித்தது. ஆனல் இம்முறை இந்தியா தனது பதக்கங்களின் மொத்த எண்ணிக்கையை 57 ஆக உயர்த்தி பதக்கப் பட்டியலில் ஐந்தாவதாக ஒருபடி உயர்ந்துள்ளது. இந்தியாவுக்கு மெய்வல்லுனரி போட்டிகளிலேயே அதிகளவு பதக்கங்கள் கிடைத்தன.

ஆசியட் பந்தயங்கள் நு திக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்த வேளைகளில் இருதடவைகள் இந்தியா நாலாமிடத்தில் வடகொரியாவை வென்றிருந்தது. ஆனல் வட கொரியா அந்த இருதடவைகளும் 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் தனது நிலையைப் பலப்படுத்தி நான்காவது இடத்தை திடமாக தப்ப வைத்துக் கொண்டது

இதுஇவ்வாறிருக்க இவ் ஒன்பதாவது ஆசியாட் போட்டிகளில் ஆசியநாடுகள் பெரும் வளர்ச்சியை விளையாட்டுத் துறையில் பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது, 81 சாதனைகள் முறியடிக்கப்பட்டு புதிய சாதனைகள் வைக்கப்பட்டுள்ளன. [கி]

# 'செயற்கை' இருதய மனிதர் திருப்தியானதேக நிலையில்!

## விசேட வீட்டிலேயே குடியிருப்பாராம்!

லண்டன், டிச. 5

உலகில் முதல் செயற்கை இருதயம் பொருத்தப்பட்டவரான டாக்டர் பாணிகிளார்க் அபாயநிலையைத் தாண்டி சுமுகமான தேகநிலையில் இருந்து வருகிறர்.

இவரை இன்னும் சில தினங்களில் கட்டிலில் இருந்து எழும்பி உட்கார வைத்து உணவு வழங்க முடியுமென்று இவரது டாக்டர்கள் தெரிவித்தனர்.

டாக்டர் பாணிகிளார்க்கின் செயற்கைஇருதயம் கோளாறு இல்லாமல் இயங்குகின்றதென்றும், நிமிடத்துக்கு 85 தடவைகள் அடிக்கின்றதென்றும் 7 லீட்டர் இரத்தத்தைப் பாய்ச்சுகிறதென்றும் செயற்கை இருதய நிபுணர்கள் தெரிவித்தனர்

டாக்டர் பாணிகிளார்க்கின் தேகநிலை நன்கு திருப்தியளித்தால் இன்னும் இரு வாரங்களில் அவரை வைத்தியசாலையிலிருந்தும் வீடுசெல்ல அனுமதிக்கப் போவதாக டாக்டர்கள் கூறினர்.

இவர் ஏனைய வீடுகளைப் போன்ற ஒரு சாதாரண வீட்டில் குடியிருக்க அனுமதிக்கப்படமாட்டார். செயற்கை இருதயத்தைக் கொண்டிருப்பவர் ஆதலால் இவ்விருதயம் பாதிப்புறமல் சீதோஷண நிலைகள் அதற்கேற்றவகையில் அமையக்கூடிய விதத்தில் விசேடமாக கட்டப்பட்ட வீடொன்றிலேயே இருப்பார் என்றும், செயற்கை இருதயத்தை இயக்க பட்டரியில் இயங்கும் காற்றமுக்க கருவியொன்று இவரது மார்புப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செயற்கை இருதயமொன்றின் விலை 16 ஆயிரத்து 450 அமெரிக்க டாலர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

# இந்திராகாங்கிரஸ் பாராளுமன்ற சட்டசபை உறுப்பினர்கள் ராஜினமா!

புதுடில்லி, டிச. 5

இந்தியாவின் ஆளுங்கட்சியான இந்திராகாங்கிரஸைச் சேர்ந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒன்பது மாநில சட்டசபை உறுப்பினர்களும் ராஜினமாச்செய்துள்ளனர்.

அகமதாபாத்தில் நடைபெற்ற இக்கட்சியின் பொதுக்கூட்டமொன்றை அடுத்தே இந்த ராஜினமாக்கள் இடம்பெற்றன கட்சியினுள் இருந்து வரும் உட்பூசல்களே இதற்கு காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

ராஜினமாச் செய்த மாநில சட்டசபை உறுப்பினர்கள் ஒன்பது பேரும் குஜராத் மாநிலசட்டசபையைச்சேர்ந்தவர்களாவர். இம் மாநிலத்தில் இந்திராகாங்கிரஸ் கட்சியே ஆளுங்கட்சியாக இருக்கின்றது. (கி)

# ஜெனரல் ஹக் அமெரிக்கா விஜயம்!

இஸ்லாமாபாத் டிச. 5

பாகிஸ்தான் ஜனுதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் எட்டுநாட்கள் உத்தியோக பூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு இன்று அமெரிக்கா பயணமாகின்றர்.

பாகிஸ்தான் அதிபரான பின்னர் ஜெனரல் ஹக் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது ஜனுதிபதி றெகனைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள ஜெனரல் ஹக், புதிய இராணுவ உதவிகள் குறித்து தாம் பேசப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் தமது பேச்சுக்கள் அமெரிக்காவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையே பொருளாதார ரீதியிலான இணைப்பை ஏற்படுத்துவதாகவே விளங்கும் என்று அறிவித்துள்ளார். [கி]

# நிலத்துக்கடியில் எண்ணை சேமிப்பு: 'ஒபெக்' நிறுவனம் எதிர்ப்பு

ஒக்ஸ்போர்ட் (பிரிட்டன்) டிச. 5

ஒக்ஸ்போர்ட்டில் நடைபெற்ற விசைவள கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகள், தமது நாடுகளில் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பது என்ற தமது முடிவை உறுதி செய்துள்ளனர்.

மேற்கு நாடுகள் பெருமளவு எண்ணெயை வாங்கிக் குவிப்பதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

"'ஒபெக்' நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதியுடன் சம வலிமையைக் காட்ட அன்றி எண்ணெய் ஏற்றுமதி விலையின் [illegible]து நிர்ப்பந்தம் கொண்டுவர [illegible]து எண்ணெய் சேமிப்பைப் [illegible]படுத்துவதற்காக மேற்கு [illegible]ன் எண்ணெய் இறக்குமதியாளர்கள், பெருமளவு எண்ணெயை வாங்கிக் குவிக்கிருர்கள் என்று ஒபெக் நாடுகள் அஞ்சுவதாகத் தெரிகிறது'' என்று திரு. போரிஸ் ராச்கோவ் என்ற பத்திரிகையாளர் எழுதுகிருர்.

இளம் எண்ணெய் வள நாடுகள் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர், ஈவிரக்கமற்ற சுரண்டலிலிருந்து தமது பொது பொருளாதார நலன்களைப் பாதுகாக்க 'ஒபெக்' ஸ்தாபனத்தை நிறுவின. அன்று முதல் 'ஒபெக்'கின் கொள்கைகளுக்கு ஓர்பரிகாரம் காண மேறகுலக நாடுகள் முயன்றுவருகின்றன. ஆபிரிக்க எண்ணெயை, ஒபெக் அச்சுறுத்தும் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவின் மிகப்பெரிய எண்ணேய்க் கம்பனி ஒன்று கூறியது. மேற்குலகம் இதையே விரும்பியது ஆனலும் அல் ஜீரியா, லிபியா, நைஜீரியா ஆகியவை இதற்கு உடன்பட மறுத்து ஒபெக்கில் சேர்ந்து கொண்டன என்று இப்பத்திரிகையாளர் குறிப்பிடுகிருர்.

நிலத்துக்கடியில் மிகப்பெரிய எண்ணெய்ச் சேமிப்பைக் கொண்டிருப்பதற்காக அமெரிக்கா மெக்ஸிகோ எண்ணெயில் பெரும் பகுதியைப் பயன்படுத்தத் திட்டமிட்டது. அமெரிக்க எண்ணெய்ச் சஞ்சிகையொன்றின் கணிப்பீட்டின் பிரகாரம், மூன்றும் உலகில் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயில் 600,000,000 தொன் எண்ணெயை மேற்கு நாடுகள் சேமித்து வைத்துள்ளன. இது மேற்கு நாடுகள் அனைத்திற்கும் 9 மாதங்களுக்குத் தேவையான எண்ணெயாகும் என்று தெரியவந்துள்ளது.

# 'றேடியோ' கட்டுப்பாட்டு விமானத்தில் ஆறு இந்தியர்!

புதுடில்லி, டிச. 5

'றேடியோ' கட்டுப்பாட்டில் இயங்கும் 'எயரோ மொடல்' என்றழைக்கப்படும் சிறிய விமானமொன்றில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த காப்டன் ஒருவரின் தலைமையில் ஆறு சிப்பாய்கள் மூன்று தினங்களுக்கு பறக்கவிருக்கின்றனர்'

ஹைதராபாத்திலிருந்து ஆரம்பமாகும்; இப்பயணம் பூனேயில் தரித்து அகமது நகர்வரை சென்று மீண்டும் ஹைதராபாத்தில் முடிவடையும்.

இவ்விசேட சிறிய விமானத்தின் பின்பகுதியிலுள்ள இயந்திரத்தினை றேடியோ கருவி கொண்டு இயங்கச்செய்வதன் மூலமே இதிலிருந்து பயணம் செய்யப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டது. இத்தகையவிமானம் முதல் முறையாகவே இந்தியாவில் பறக்கவிடப்படுகின்றது.

(கி)

## மணிவாக்கு

அந்நிய மொழியில் கல்வி பயில்வதால் ஏற்படும் தீங்கு அளப்பரியது. அத்தீங்குக்கு ஆளாகியிருந்த நாம் அத்தீங்குக்கு அது பற்றித் தீர்ப்புச் சொல்லும் ஆற்றல் அற்றவர்களே! எவ்வித தற்காலிக குழப்பநிலை ஏற்பட்டபோதும் உடனடியாகத் தாய்மொழி மூலம் உயர்கல்வி என்ற மாற்றத்தை அமுல்செய்ய வேண்டும்.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## தேசிய வீரமும் நாமும்

அறநெறியையும், தேசப் பற்றையும் தமது "சுவர்க்க நீக்கம்" என்ற பெருங்காப்பியத்தில் பாட்டாகப் பொழிந்தார் பிரபல ஆங்கிலக் கவிஞர் மில்த்தனர் (Milton)

கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தின் இயற்கை வனப்பையும், மக்கள் மனப் போக்கையும் தலை கீழாக மாற்றிய கட்டத்தில் மனம் நொந்த உவேட்சு வேத் (Wordsworth) என்ற இயற்கைப் புலவன், 'மில்த்தனரே! நீர் இன்று இங்கே இருந்திருக்க வேண்டும்'' என்று பாடிய பாட்டு ஆங்கில இலக்கியத்தியத்தில் பேர்போன பாட்டு.

இன்று இலங்கையில் 'தேசியம்' என்ன உருவம் எடுத்திருக்கிறது என்று உணரக்கூடிய தமிழ் மகன் எவனும், இந்தப் பாணியில் நாவலரை, இன்றைய குருபூசை தினத்தில் விழித்துப் பாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாவலரை நாம் ஒரு சமயவாதியாக கொள்வதால் இலங்கைத் தேசியத்தில் அவருடைய பெரும் பங்கு மறக்கப்பட்டு வருகிறது.

நல்ல காலம் இலங்கை அரசாங்கமே அவர் ஒரு தேசியவீரர் என்று நன்று ஆராய்ந்தபின் ஒத்துக்கொண்டுவிட்டது. அது மட்டுமல்ல தமிழ் மக்கள் நல்லூரில் நாவலருக்கு எழுப்பிய சிலையைத் தொடர்ந்து, ஒரு மணி மண்டபத்தை அமைக்க அரசு முற்பட்டது.

கடந்த ஆட்சியில் ஆரம்பமான இப்பணி கைவிடப்பட்டிருந்த நிலையில் இன்றைய அரசாங்கத்தில் அது துரிதப்படுத்தப்பட்டு முடிவடையுமென நம்பலாம்.

சிலையும், மணி மண்டபமும், பெரியார்களுக்கு நிறுவும் வழக்கம் பெரும்பாலும் அவர்களை மறந்துவிட உதவுவது நாம் அனுபவத்துற் கண்டது. அவர்கள் எடுத்த பொதுக் கைங்கரியங்களையும், லட்சியங்களையும் கைவிடுவதற்கு ஒரு ஆதாரமாகவே இவை காணப்படுகின்றன.

நாவலர் மறைந்தும் இற்றைக்கு 153 வருடங்கள் கழிந்துவிட்டது. அவருடைய ஆளுமை தமிழுக்கும சைவத்துச்கும்தான் பயன்பட்டதாக இன்றைய சமூகம் கருதுவதும், அதற்கேற்ற முறையில் அவற்றை மறந்து விடுவதும் இன்றைய நெருக்கடிக்கு ஒரு பிரதான காரணமென்றால் அது மிகையாகாது.

சுதந்திர இலங்கையில் சிங்கள – பௌத்த தேசிய வாதி அநகாரிக தர்மபாலா சிங்கள மக்களால் எவ்வாறு போற்றப்பட்டு, அவர்பெயரில் வருடா வருடம் நாட்டில் என்னென்ன எழுச்சி வேலைகள் நடைபெறுவதென்பதை அறியாதார் ஒன்றும் அறியாதவரே!

பௌத்த மதத்தின் பெருமையையும், அதன் கோட்பாட்டுக் கமைந்த கல்வி முறையையும், அமெரிக்க பிரம்மஞானி கேணல் ஒல்கட் கடல் கடந்து இங்கு வந்து போதிக்க வேண்டிய தேவை இருந்தது.

இன்று பௌத்தர்களின் தலைசிறந்த தேசியக் கல்லூரி கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அன்று 'ஒல்கட் ஸ்கூல்' என்று அழைக்கப் பட்டது.

இவ்வித நிர்ப்பந்தம் எதுவும் இல்லாத நாம் இங்கு என்ன செய்கின்றோம்? 'தமிழ் எங்கள் உயிர்' என்ற கோஷத்துடன் 'தமிழும் உயிரும்' ஒழியும் கால கட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். நாவலருக்கு வருடா வருடம் பூசை செய்கின்றோம்.

இலங்கைத் தேசிய வரலாற்றில் நாவலரின் பங்கைப் புரியாதவர்களும், அநகாரிக தர்மபாலாவைப் பற்றிக் கேள்விப்பட்டவர்களும் அநகாரிக தர்மபாலாவைப் போன்றவர் நாவலர் என்று கூறிக் கொள்கின்றனர்: அது அப்படியல்ல வென்பது தமிழரின் இன்றைய இருளடைந்த கட்டத்திலாவது நாம் உணர வேண்டும்.

வேற்றுசமயங்களை எதிர்த்தவர்கள் என்ற வகையிலும் தத்தம் சமயங்களை சீர்திருத்த முயன்றவர்கள் என்ற வகையிலும் மாத்திரம் இவ்விருவருக்கும் ஒற்றுமை காணலாம்.

நாவலர் தமிழராகவிருப்பினும் இலங்கையின் முழு தேசியத்திலும் அக்கறை கொண்டிருந்ததை அவருடைய எழுத்துக்கள் எடுத்துக்காட்டும். தாம் இலங்கையர் என்பதில் பெருமையடைந்தவர் நாவலர்.

அநகாரிக தர்மபாலா பௌத்த–சிங்களம் ஆகிய இரண்டையும், இணைத்து, அதே இலங்கைத் தேசியம் என வற்புறுத்தினார். எனவே அவருடைய செல்வாக்கு சிங்கள தேசியத்துக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

நாவலர் தமிழரது அரசியல் வாழ்க்கையில் தமிழுக்கும் சைவத்துக்கும் முடிச்சுப் போட்டுவைக்கவில்லை. அதுமட்டுமல்ல பௌத்தத்திற்கு எதிராகவோ அல்லது சிங்கள மக்களுக்கெதிராகவோ பிரசாரம் எதுவும் செய்யவில்லை. வரலாற்றின் போக்கினை ஏற்றுக் கொள்ளும் மதிநுட்பம் கொண்டவர் நாவலர். எனவே தமிழ்த் தேசியம் என்ற பண்டம் விலைமதிக்க முடியாத நிலையை அடைய முடியும்.

இந்த அடிப்படையிலே இலங்கையின் முதுபெரும் அரசியல் வாதியும் சர்வ தேசப் புகழ் வெற்றவருமான சேர் முத்துக்குமார சுவாமி தமதுவாதங்களுக்கு ஆதரவாகக் குறிப்பிட்ட பெரியவர்களில் நாவலரும் ஒருவராவர்; தமிழ்த் தேசியம் அன்று தொக்கு நின்றது.

மேலும், தமிழருக்குப் பொதுவாகவும், யாழ்ப்பாணத்தவருக்குச் சிறப்பாகவும் அரிய சேவை செய்யும் வல்லமை இளைஞர் இராமநாதனுக்கு உண்டு என்று அறிந்து அவருக்கு ஆதரவு திரட்டி சட்டசபைக்கு அனுப்பி வைத்தவர் நாவலர்.

அதுவே இராமநாதசகாப்தத்தின் ஆரம்பமாகும். 52 வருடத்துக்கு முன் மறைந்த சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தேசிய சாதனை எத்தகையது என்பதும்; அவர் மறைந்த காலத்தில் ஆரம்பமான வகுப்புவாதம் சுதந்திர இலங்கையில் வளர்ச்சியடைந்து இன்று என்ன நிலையில் நம் மக்கள் இந் நாட்டில் வாழ்கின்றனரென்பதும், தேசிய வீரர் நாவலர் கதையின் தொடர் பகுதியாகும்.

ஆராய்ச்சிக்குரிய விடயம் இது; ஆனால் அபாயத்தை நீக்கவல்ல முயற்சியாகுமா?

## ★ இன்று நாவலர் குருபூசை

# சீர்திருத்த வாதி நாவலர்

**மேனாட்டுக் கல்வி புதிய அறிவினைப் பரப்பி, வரலாற்று அறிவும் தேசிய உணர்வும் சொந்தப் பண்பாட்டைப் பேணி வளர்க்கும் ஆர்வமும் பெருகக் காலாயிற்று. சுதேச மக்களின் பண்பாட்டுக்குப் பங்கம் விளைவித்த அம்சங்களை அகற்றி, மேனாட்டுக் கல்வி முறையின் நல்ல அம்சங்களைக் கைக்கொண்டு கல்விச் சீர் திருத்த முயற்சிகளை மேற் கொண்டார் நாவலர்.**

சி. தில்லைநாதன்



இலங்கை மக்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதன் மூலமே உய்திபெறுவரெனக் கருதிய மதப் பிரசார இயக்கத்தினர், அவர்களைக் கிறித்தவராக்கும் நோக்குடனும் தம் பாடசாலைகளிற் கல்வி பயில்வோர் ஆங்கில ஆட்சியை உறுதிப்படுத்துவதும் மேலைத் தேய நாகரிகத்தைப் பரப்பவும், உறுதுணையாவர் என்ற நம்பிக்கையுடன் கல்வித் தொண்டில் இறங்கினர்.

### கல்வி

அத்தகைய அவர்களது மதம் பரப்பும் முயற்சிகளின் மேற்கொண்ட பீதியின் விளைவாக'' பிறந்தவைதான் பல கல்வி நிலையங்களும் சமூக நல முயற்சிகளும். சமுதாய சமய சீர்திருத்த நடவடிக்கைகளும் ஆகும். சமுதாய சீர்திருத்த வாதிகள் மனிதனின் கடமை உணர்விற் பெரு நம்பிக்கை வைப்பதுபோல் சமய சீர் திருத்தவாதியான நாவலர் மனிதனின் கடவுட் பற்றிலே நம்பிக்கை வைத்தார்.

### சமயம்

சமயத்துக்கு ஆபத்து வந்த காலத்தில் அதன் நிலையாதாரங்கள் சீரழிந்தும் செம்மையிழந்தும் வேற்று மதத்தவரின் கேலிக்கிடமாய்க் கிடந்தன. அத்தருணத்தில் நாவலரின் கவனம் கோயில்களையும் அவற்றின் கருமங்களை ஆற்றுவோரையும் சீர்திருத்துவதில் பெருமளவிற் சென்றது.

சமுதாய வாழ்வினைப் பெருமளவுக்கு நெறிப்படுத்திய கோயில்களிலே பொதுப்பெண்கள் நடனம், வாண விளையாட்டு, சிற்றின்பப்பாட்டுக்கள், உயிர்ப்பலி போன்ற

(5-ம் பக்கம் பார்க்க)

### குருபூசைபற்றி நாவலர் கூறியது

1. குருபூசைக்குத்தக்கபொருளில்லாதவர்கள் யாது செய்ய வேண்டும்?

குருபூசை செய்யப்படுந் தானத்திலே தங்கள் தங்களால் இயன்ற பதார்த்தங்கள் கொண்டுபோய்க் கொடுத்துத் தரிசனஞ்செய்தல் வேண்டும். அதுவும் இயலாதவர்கள் கறி திருத்துதல் முதலிய திருத்தொண்டுகளேனும் செய்தல் வேண்டும்.

2. குருபூசை எப்படிச்செய்தல்வேண்டும்?

திருக்கோயிலிலே சிவலிங்கப் பெருமானுக்கும், அந்நக்ஷத்திரத்திலே சிவபதம் அடைந்த நாயனார் திருவுருவம் உள்ளதாயின் அதற்கும் விசேஷ பூசை செய்வித்துத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்மிடத்துக்கு அழைக்கப்பட்டும் அழைக்கப்படாதும் எழுந்தருளிவந்த சிவபத்தர்களை அந் நாயனாராகப்பாவித்துப் பூசித்துத்திருவமுது செய்வித்துச் சேஷம் புசித்தல் வேண்டும்.

3. சேஷம் எத்தனைவகைப் படும்?

பாத்திரசேஷம்பரிகலசேஷம் என இரண்டு வகைப்படும்.

மாகேசுரபூசையாவதுயாது?

ஆசாரியர், நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமய தீஷதர் என்னும் நால்வகை மாகேசுரர்களையும் விதிப்படி பூசித்துத் திருவமுது செய்வித்தலாம் மாகேசுரர் மகேசுரனை வழிபடுவோர்)

# சமயவிழிப்பு ஏற்பட்டுள்ளது

''கடவுளையும் அவரைவழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பலனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை. ஆதலால், அவரை ஒருகாலமும் மறவாதே''

— ஆறுமுகநாவலர்

நமதுசமயம் ஆன்மலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்கிக்கொண்டிருக்கும் ஒரு நெறியாகும். இந் நெறியை உள்ள உள்ளபடி எமக்குப் பேணித்தந்தவர் ஆறுமுகநாவலர் அவர்களாவர்

சென்றநூற்றுண்டின் புறமதத்தாக்கங்களில் இருந்து சைவர்களைக் காப்பாற்றிய நாவலர் அவர்கள் பலகோணங்களில் நின்று எமக்கு வழிகாட்டினார்கள். அவற்றுள் ஒன்று குருவைப்பேணல், போற்றுதல் என்பதாகும். அதற்கோர் சான்றாக அமைந்து நிற்கிறது மேற்காணும் நிறைமொழி.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை கடந்தபதிநான்குஆண்டுகளாகத்தன் சக்திக்கேற்ப– ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய தருமங்களை நடைமுறைப்படுத்திவருகிறது. சபையின் முயற்சிகளுக்குச் சைவப்பெரு மக்கள் மனம் கோணாமல் ஒத்துழைப்பு வழங்கிவருவது நாடறிந்த உண்மையாகும்.

இவ்வாண்டு நாவலர்சபை மேற்கொண்ட 'நாவலர் குருபூசை, மாகேசுரபூசை' என்ற தருமத்திற்கு உபகரித்தவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## விநாயகர் தோத்திரம்

வினைத்துயர் தீர்ப்பாய் போற்றி
வித்தக மாவாய் போற்றி
நினைத்தவர் வாழ்வே போற்றி
நீள்விசும் பாவாய் போற்றி
தனைத்[illegible]ரு தேவா போற்றி
தவமருள் தவமே போற்றி
அனைத்தற மாவாய் போற்றி
ஐங்கரா போற்றி போற்றி.

முத்தமிழ் முதலே போற்றி
முத்தருள் மூத்தே போற்றி
சுத்தமுச் சுடரே போற்றி
சூழ்தளை யறுப்பாய் போற்றி
பத்தருட் பழுப்பாய் போற்றி
பரகதி தருவாய் போற்றி
அத்தனு னந்தா போற்றி
ஐங்கரா போற்றி போற்றி.

--ச. தங்கமாமயிலோன்

# "சேவையாளர்களைப் பாராட்டுவது கடமை"

[யாழ்ப்பாணம்]

"சமூக சேவைப் பணிகளில் சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவேண்டியது தமிழ் மக்களின் பிரதான கடமைகளில் ஒன்று" என்று கந்தர்மடம் ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த திரு செல்வன் தியாகராசா யாழ் மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதையொட்டி நடைபெற்ற பாராட்டு விழாவில், யாழ் மாநகர முன்னாள் உதவி முதல்வர் திரு ஜே எவ். சேவியர், பேசுகையில் தெரிவித்தார்.

யாழ் பொதுசன நூலகக் குழு உறுப்பினர் திரு த முருகரத்தினம் தலைமையில் இப்பாராட்டுவிழா நடைபெற்றது.

யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். யேசுரத்தினம் முன்னிலையில், திரு தியாகராசா சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

கலைமகள் சனசமூக நிலையப் போஷகராகவும், யாழ். ப. நோ. கூ. ச கந்தர் மடக்கிளைச் செயலாளராகவும், தமிழர் விடுதலைக்கூட்டணி கந்தர் மடக்கிளை நிர்வாக உறுப்பினராகவும் திரு. தியாகராசா பணியாற்றி வருகிறார்.

இப்பாராட்டு விழாவில் யாழ். எம். பி. திரு வெ யோகேஸ்வரன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். சண்முகராசா, சிறுபான்மையைத் தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கே. கணபதிநாதன் உட்பட பலர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

# சீர்திருத்தவாதி

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வைவை ஒழித்துக் கட்டுவதில் முன்னின்று உழைத்தார்.

## சமூகம்

"சீர்திருத்தம் அதிகப்பட்டு வரும் இக்காலத்தில் நல்ல மரத்தில் புல்லுருவிகள்போலச் சில மோசங்களும் சிறிது சிறிதாய்ப் பெருகுவதைப் பார்ப்பது துக்கமான சம்பவம். மதுபானம் பாவித்தல், அலங்கார மாளிகை, விலைபெற்ற வர்ணப் பட்டாடை முதலியவைகளில் அதிக பணத்தைச் செலவிடுதல், ஐரோப்பிய நாகரிக பழக்கவழக்கங்கள் ஆதியன யாழ்ப்பாணத்தின் ஏற்றத்தை தோற்றத்தையும் அழிக்குங் குருவிச்சைகளாம்" என எழுதியிருப்பதும் அவதானிக்கத்தக்கது.

## பகுத்தறிவாளன்

நாவலரின் சீர்திருத்தங்கள் பொதுவாகச் சமய நூல்களையும், ஆசாரங்களையும், வரலாறுகளையும் சார்ந்தே அமைந்த போதிலும், சனங்கள் பாவங்களை விடுத்துப் புண்ணியங்களைத் தேடும் அவசியத்தை மட்டுமன்றி வறுமையும் துன்பமும் அகன்று செல்வமும் ஆரோக்கியமும் பெற வேண்டியதன் அவசியத்தை அவர் வற்புறுத்தினர். அவர்களுடைய சீர்திருத்தக் கருத்துக்கள் புதிய விஞ்ஞான அறிவு பெற்றதொரு பகுத்தறிவாளரின் குரலாக ஒலித்தது.

கோயில்களில் மட்டுமன்றிச் சமுதாயத்திலும் காணப்பட்ட போலி வேஷத்தையும், கபடத்தையும், ஊழலையும் நாவலர் கடிந்தார். நல்லொழுக்கமின்றி பிறப்பாலே தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற மிடுக்கோடு போலி வேஷம் போட்டவர்களை நாவலர் காரசாரமாகக் கண்டித்தமை கவனிக்கத்தக்கது.

## மரபு வழி

சுருங்கக் கூறின் எம்மவர் புறக்கணிப்புக்கும், பிறரது அவமதிப்புக்கும் இலக்காயிருந்த சைவ வாழ்க்கையினை நேராக்கிச் சீராக்கத் தமக்குச் சரியெனப்பட்ட வழிகளிலெல்லாம் உறுதியோடும் தியாக சிந்தனையுடனும் நாவலர் செயற்பட்டார்.

நாவலர் சைவ உலகில் சீர்திருத்த விழுந்த குறைபாடுகள் பல இன்றும் மன்றிக் கிடப்பது விசனம் தருவதாயினும், நாவலரது நடவடிக்கைகள் சமயத்துறையில் மட்டுமன்றி வேறு துறைகளிலும் விளைத்த பலனைக் குறைத்து மதிப்பிடலாகாது.

# ஐந்தாங் குரவரடி!

நாவல ரெண்கையிலே
நாவெல்லாந் தேனூறும்
ஜீவ மலரினிலே-கிளியே!
சிவம்வந்து தித்திக்குமே.

அஞ்சாத நெஞ்சுடையார்!
அறநெறி வாழ்வுடையார்
துஞ்சாத தொண்டுடையார்-
கிளியே
சுதந்திர நாவலரே.

ஆழக் கடலைப் போலே
அறிவுக் கடலுடையார்
ஈழத்துச் சிங்கமடி-கிளியே!
இலக்கியச் சரங்கமடி

பைந்தமிழ் வியாசரவர்
பசுபதி நேசரவர்
ஐந்தாங் குரவரடி!-கிளியே!
ஆறுந்தரம் வாராரோ?

-கவியோகி
சுத்தானந்தபாரதி

## சமயவிழிப்பு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பட்டியலில் கல்லூரிகள், ம/வித்தியாலயங்கள், பள்ளிக்கூடங்கள் என்ற அமைப்புகளும், வணிகப்பெருமக்களும், குறிப்பாக யாழ். மாநகரசபை ஆணையாளரும் காட்டிய ஆர்வம் சிந்தனைக்குரியதாய் நம்மவர்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் சமய விழிப்பையே எடுத்துக்காட்டுவனவாய் அமைந்து நிற்கிறது. குருவணக்கம், என்பது நாளும் பொழுதும் விருகிவரும் இந்நாட்களில் மேற்படி சம்பவங்கள் எம்மை, நாவலர்சபை போன்ற அமைப்புகளைத் தெம்புகொள்ளச் செய்கிறது. என்றால் மிகையாகாது.

க. இளையதம்பி
துணைச்செயலாளர்,
ஆறுமுகநாவலர் சபை.

# மதகுருமார்கள் நலத்திற்கு விசேட ஆராதனை

(மன்னார்)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார் உட்பட ஏனைய இளைஞர்களின் உடல் நலத்திற்காக தலைமன்னார் மேற்கு புனித. லோறன்ஸ் ஆலயத்தில் விசேட ஆராதனை இடம்பெற்றது. இவ்வாராதனையில் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த மதகுருமார், கன்னியாஸ்திரிகள், பாடசாலை மாணவ மாணவிகள், பொது மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

# மல்லாகத்தில் உண்ணாவிரதம்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் பழம்பிள்ளையார் முன்றலில் பெண்கள், வயோதிபர்கள், மாணவர்கள் உட்பட சுமார் ஆயிரம் மக்கள் மதகுருமார்களையும், விரிவுரையாளர் தம்பதியையும் விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதமிருந்தனர்.

வலி வடக்குப் பகுதியில் இந்து ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற முதலாவது சத்தியாக்கிரகம் இதுவாகும். (கி)

# நன்றி ஆராதனை

(அரியாலை)

பரந்தன் நவஜீவன ஸ்தாபகரான காலஞ் சென்ற அருட் திரு ஏ. சி தம்பிரசா அடிகளாரின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனை நவஜீவன தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவ்வாராதனையில் குடும்ப அங்கத்தவர்களும், நஜீவனத்தின் பராமரிப்பில் வாழும் பிள்ளைகளும், மற்றும் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் சலந்துகொண்டனர். (அ)

# கொழும்பில் பாரதி நூற்றுண்டு விழா

(யாழ்ப்பாணம்)

'கலை இலக்கிய பத்திரிகை' நண்பர்கள்' ஏற்பாட்டில் 'மகாகவி பாரதி' நூற்றுண்டு விழா எதிர்வரும் 11-ம் திகதி சனிக்கிழமை மாலை கொண்டாடப்படவிருக்கிறது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இவ்விழா இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான், இந்திய தூதரக இரண்டாவது செயலாளர் திரு ஸ்ரீ ஆர். வாசுதேவன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்

பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறைத்தலைவர் திரு. தில்லைநாதன், நாவலராசிரியர் திரு. செ. கணேசலிங்கன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக திரு. எம். ஏ. குலசீலநாதனின் 'பாரதி பா' அஞ்சலியும், 'மகாகவி பாரதி, நூல்வெளியீடும், சாந்திகா கலையகத்தின் 'கவிஞன் கனவு' என்ற நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறும். (கி)

# "மதகுருமார்களை மறக்க முடியாது"

[புங்குடுதீவு]

"தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றுத் துறைகளிலும் ஆராய்ச்சித் துறைகளிலும் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்த மதகுருமார்களை நாம் மறக்க முடியாது, தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை உலகளாவிய ரீதியில் உருவாக்கி வழிப்படுத்திய தனிநாயக அடிகளாரை இந்த நூற்றுண்டில் தமிழராக நாம் கருத வேண்டும்"

மேற்கண்டவாறு புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் மதகுருமாரையும் நித்தியானந்தன் தம்பதிகளையும் விடுதலை செய்யுமாறும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறும் வேண்டுகோள் விடுத்து நடைபெற்ற உண்ணாவிரதத்தில் ஆரம்ப உரை நிகழ்த்திய புலவர் ஈழத்துச்சிவானந்தன் கூறினர்.

அந்தோனியார் ஆலய பரிபாலகரான திரு. சு. யேசுராசா தலைமையில் நடந்த இந்தஉண்ணாவிரதத்தில் சமய வேறுபாடின்றி சைவசமயத்தைச் சேர்ந்தவர்களும் பெருந்தொகையாகக்கலந்து கொண்டனர். கிறிஸ்தவ கீர்த்தனைகளும், தேவார திருவாசகங்களும் 'உண்ணாவிரதக்காரர்களால் பாடப்பட்டன.

புலவர் சிவானந்தன் தொடர்ந்து பேசுகையில், மதகுருமாருக்கு அல்லது சைவசமயக் குருக்கள்மாருக்கு மொழி, இன, கலாச்சார பிரச்னைகளில் அக்கறை இருக்கவேண்டியது இல்லை என்ற அறியாமையை நாம் நீக்கவேண்டும் என்று கூறினர்

மழையையும் பொருட்படுத்தாது நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தை ஆலயத் தொண்டர்கள் குளிர்பானம் வழங்கி முடித்து வைத்தனர்

## அதிகரிக்கப்பட்ட

# புதிய மின்கட்டணத்தை அறவிடநடவடிக்கை

[மாவிட்டபுரம்]

அதிகரிக்கப்பட்ட புதிய மின்சாரக் கட்டணங்களை பாவனையாளர்களிடமிருந்து அறவிட மாவட்ட அபிவிருத்திச் சபையின் உபஅலுவலகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

கடந்த ஜூன் மாதமே மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தும் அதிகரிப்பு சம்பந்தமான விபரங்கள் தெரிவிக்கப்படாமையால் மாவட்ட அபிவிருத்திச்சபையின் உபஅலுவலகங்கள் இந்த அதிகரித்த கட்டணத்தை வசூலிக்கமுடியாமலிருந்தன.

அண்மையில் இந்த விபரங்கள் உபஅலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த அதிகரித்த மின் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வீட்டுப்பாவிப்புக்கு முதல் 50 அலகுகளுக்கு 50சதவீதமும் 51 முதல் 150வரையான அலகுகளுக்கு 90 சதவீதமும் 151 தொடக்கம் 500 வரையான அலகுகளுக்கு 90சத வீதமும் எரிபொருள் கட்டணம் 110 வீதமும், 500க்குமேல் உபயோகிக்கும் அலகொன்றுக்கு 1ரூபா வீதமும், எரிபொருள் கட்டணம் 110 வீதமும். ஆகக் குறைந்தகட்டணம் 15 ரூபாவாக இருக்கும்.

கோவில்கள், தேவாலயங்கள் போன்றவற்றுக்கு பாவிக்கப்படும் சகல அலகிற்கும் 50 சத வீதம் அறவிடப்படும் ஆகக் குறைந்த கட்டணம் 15 ரூபா ஆகும்.

கடைகள், வங்கிகள், பொதுக் கட்டிடங்கள், ஆஸ்பத்திரிகள், காரியாலயங்கள் போன்றவற்றுக்கு உபயோகிக்கப்படும் சகல அலகிற்கும் 90 சத வீதமும் எரிபொருள் கட்டணம் 110 வீதமும் அறவிடப்படும். நிர்ணயிக்கப்பட்ட 5 கே. வி. க்கு குறைந்த கட்டணமாக 50 ரூபாவும் 5 கே. வி ஏ க்கு மேற்பட்ட கே. வி. ஏ ஒன்றுக்கு 12 ரூபாவீதமும் அறவிடப்படும்.

# உண்ணாவிரதங்களும் ஊர்வலங்களும்

[மண்டைதீவு]

பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற கொடிய சட்டம் தென்னாபிரிக்க நாடுகளில் உள்ள இன ஒதுக்கலிலும் மிகவும் பயங்கரமான சட்டமாகும்"

இவ்வாறு காவலூரர் எம். பி பண்டிதர் கா பொ. இரத்தினம் நேற்றுக் காலை அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார்தேவாலய முன்றலில் மௌன ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது அவசர காலச் சட்டத்தின் கீழ் தமிழ் இனத்தைப் பழிவாங்கியது ஆனால் இன்றைய அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மதகுருமார்களைக்கூட கைதுசெய்து வருகிறது இந்தச்சட்டத்தை மேலும் நீடிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது எமது இனம் ஒற்றுமைப்பட்டு ஓர் அணியில் சாத்வீகப்போராட்டத்தைத் தொடர்ந்துநடாத்தவேண்டும்

## 18 மாதங்கள் மட்டுமே என்றனர்

பயங்கரவாத தடைச்சட்டத்தை முதலில் அரசு அமுல் செய்யும்போது இச்சட்டம் 18 மாதங்களுக்கு மட்டுமே இருக்கும் என்று அறிவித்தது. ஆனால் இன்று அந்தக்கால எல்லை முடிந்தும் தொடர்ந்து அச்சட்டத்தை அமுலில்வைத்து எமது இனத்தை மேலும் துன்புறுத்தி வருகின்றது" என்ஞர்.

தேவாலய முன்றலில் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மத வேறுபாடின்றிக் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை உண்ணாவிரதம் இருந்தார்கள்.

இவ் உண்ணாவிரதத்திற்கு முன்பு தேவாலயத்தில் விசேஷ பூஜை வழிபாடுகள் நடைபெற்றன தொடர்ந்து ஆரம்பமான ஊர்வலம் அல்லைப்பிட்டிப் பிரதான வீதி ஊடாகச் சென்று இனிச்சம்புளியடிக் கந்தசாமி கோவில் வீதிவழியாக வந்து அல்லைப்பிட்டி சென். ஜேம்ஸ் தேவாலயம் சென்று அங்கிருந்து உண்ணாவிரதம் இருக்கும் இடத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் பெருந்தொகையான மாணவர்களும், இளைஞர்களும் கறுப்புப்பட்டிஅணிந்த வண்ணம் அரசுக்கு எதிராக வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் சென்றனர்கள்.

இப்பகுதியிலுள்ள இந்து ஆலயங்களில் எல்லாம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

## மாதகலில்

(பண்டத்தரிப்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் மதகுருமாரையும், விரிவுரையாளர்களையும் விடுவிக்கக்கோரி மாதகல் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உண்ணாவிரதத்தில் சிறுவர் சிறுமியர் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்கள். இன்று காலை ஏழு மணிக்கு மாதகல் பங்குத் தந்தை அருட்திரு சந்தியாப்பிள்ளை அடிகள் நடத்திய பூசையைத் தொடர்ந்து உண்ணாவிரதம் ஆரம்பமானது. "மதகுருமாரை விடுதலை செய்" நீதிமன்றத்தில் நிறுத்துங்கள், "பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றுக, மக்களின் ஜனநாயக உரிமைகளில் கைவையாதீர்" போன்ற பல சுலோக அட்டைகளைத்தாங்கிய வண்ணம் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது. உண்ணாவிரதமுடிவில் மாதகல்கடற்கரையைநோக்கி இரண்டுமைல் நீளமௌன ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. (அ)

## குப்பிளானில்

"மனித உரிமைகளை நசுக்கும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக... என்ற சுலோகத்தை தாங்கியவாறு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆயிரத்துக்கு மேற்பட்டோர் குப்பிளான் சொக்கர்வளவு சோதி விநாயகர் ஆலய முன்றலில் ஒருநாள்உண்ணாவிரதம்அனுஷ்டித்தனர்.

இவ்வுண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இந்துக்கள், கிறிஸ்தவர்கள் இருசாராரும் கறுத்தப் பட்டிஅணிந்து தத்தம் மதப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்து கிறிஸ்தவ கீர்த்தனை

[8-ம் பக்கம் பார்க்க]

# "சகல மத பீடங்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது!"

## மாவை ஆதீனம் - நகுலேஸ்வர ஆதீனம் கூட்டறிக்கை

[மாவிட்டபுரம்]

''அவசரகாலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் அரசும் ஆயுதப்படையினரும் எடுத்துவரும் நடவடிக்கைகள் கத்தோலிக்க மதகுருமாருக்கு மட்டுமல்ல சகல மத பீடங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. நீதிக்குப் புறம்பான இந்நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்''

இவ்வாறு மாவை ஆதீனமும் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஆகிய இருவரும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மனித உரிமைகள் மீறப்படுவதும் சாதாரண சட்ட நடைமுறைகள் புறக்கணிக்கப்படுவதுமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் வணக்கத்திற்குரிய கத்தோலிக்க குருமாரை இராணுவ முகாமில் தடுத்து வைத்து துன்பத்திற்குள்ளாக்குவதும் மக்கள் மத்தியில் பதட்ட நிலையை தோற்றுவித்துள்ளது. சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை சந்தேக நபர் நிரபராதி என்றே கொள்ள வேண்டும். ஆனால் அரசும் அரசுசார்பு பத்திரிகைகளும் ஆயுதப்படையினரும் மதகுருமாரை குற்றவாளிகளாக்கும் வகையிலும் அவமானப்படுத்தும் வகையிலும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளமை இந்நாட்டு மதபீடங்களை பெரிதும் புண்படுத்துகிறது.

''மதகுருமாரையும் கல்விமான்களையும் இளைஞர்களையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களை சாதாரண சட்டத்தின் கீழ் நீதிமன்றம் கொண்டுவந்து ஜனநாயக பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டுமென ஜனாதிபதி அவர்களைக் கோருகிறோம்.

''நீதியான கோரிக்கைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் நீதிக்கும் தர்மத்திற்கும் போராடும் மக்களுக்கு சைவ உலகும் குறிப்பாக சைவமத பீடங்களும் ஒத்துழைப்பு நல்க தயாராக இருக்கிறோம்.

''இக்கோரிக்கைகளை முன் வைத்தும், மதபீடங்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் மாவிட்டபுரத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்த எண்ணியுள்ளோம்.''

## மாதகலில் ராணுவம்

# காரைத் தடுத்து நிறுத்த துப்பாக்கிப் பிரயோகம்!

## கடத்தல் முயற்சி முறியடிப்பு!!

(மாவிட்டபுரம், பண்டத்தரிப்பு)

நேற்று முன் தினம் ரோந்து சுற்றுதலில் ஈடுபட்டிருந்த மாதகல் ராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சிலர் தமது உத்தரவுக்கு பணிய மறுத்து வேகமாக சென்ற காரொன்றை துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிறுத்தி 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு 'கஸட்' வானொலிப் பெட்டிகளைக் கைப்பற்றினர். இவ் வானொலிப் பெட்டிகள் கடத்தலுக்காகக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான காரின் இலக்கம் சி. எல். 5878 ஆகும். இக்காரின் கண்ணாடிகள் மிகவும் நொறுங்கியுள்ளன. ஆயினும் உள்ளிருந்தவர்கள் ஓடித்தப்பி விட்டனர்.

இக் காரையும், அதனுள்ளிருந்த ஆறு 'கஸட்' வானொலிப் பெட்டிகளையும், மாதகல் இராணுவ முகாமைச் சேர்ந்த உதவி லெப்டினன்ட் எம். ஜி. திலகரட்ண சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளார். (கி)


தவணைமுறையில் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்வனவு செய்து
அதே நாளில் உங்கள் வீட்டில் பொருத்திக்கொள்ள
வீனஸ் றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
சென்னை ரூபவாகினி நிகழ்ச்சிகளைத்
தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன்
'ஏரியல்' (அன்ரனு)
பொருத்திக் கொள்ளவும்.
★ சொனி (Sony)
★ நஷனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சீரு (Siera)
மற்றும் இன்னோரன்ன வர்ண-கறுப்பு/வெள்ளை
தொலைக்காட்சிப் பெட்டிகளை சகாய விலைக்கு
தவணைமுறையில் (F) பினான்ஸ் வசதியுடன்
பெற்றுக் கொள்ளவும்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## எகிப்திய அரசு சதி விசாரணை

கெய்ரோ, டிச. 5

எகிப்திய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 300 சந்தேக நபர்கள் மீதான விசாரணை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இவர்களில் 297 பேருக்கு மரணதண்டனையும், 3 பேருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனையும் வழங்கப்பட வேண்டுமென்று அரசாங்க வழக்குத் தொடுநர் கேட்டுள்ளார்.

இவர்கள் மீது பொலிசாரைப் படுகொலை செய்தது உட்பட 12 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. (வெ)

## மீண்டும் தெரிவானார்கள்

[யாழ்ப்பாணம்]

வடமாகாணம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளராக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இச் சமாசத்தின் வருடாந்த மகாநாட்டில் இத் தெரிவு இடம்பெற்றது. இச் சமாசத்தின் பொதுச்சபை திரு. நடராசாவை மீண்டும் தெரிவு செய்தது.

சமாசத்தின் தலைவரும், யாழ். மாவட்ட சபை உறுப்பினருமான திரு. சு. நடேசு இச் சமாசத்தின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இச் சமாசத்தின் புதிய நெறியாளர் குழு உறுப்பினர்கள் ஏழு பேரும் இச்சபையால் தெரியப்பட்டனர். (க.ண்-நிரு)

## சுவரொட்டி சித்திரப் போட்டியில் பரிசு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

இலங்கை கயரோக நிவாரண, தடுப்பு தேசிய சங்கம் அகில இலங்கை ரீதியில் அதன் கிளைகளுக் கிடையில் அண்மையில் ''துப்புவதினால் கயரோகம் பரவுகின்றது'' என்ற தலைப்பில் சுவரொட்டி சித்திரப் போட்டியொன்றை நடாத்தியது.

இப்போட்டியில் வலிமேற்கு கிளையிலிருந்து பங்கு பற்றிய மானிப்பாய் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி சுமதி துரைராசா, இளவாலை கன்னியர் மடவித்தியாலய மாணவி செல்வி இராமரத்தின சுந்தரம் ஆகியோர் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வைபவ ரீதியாக வழங்கப்படவிருப்பதாக இலங்கை கயரோக நிவாரண, தடுப்புச் தேசிய சங்கத்தின் வலி மேற்கு கிளையின் அமைப்பாளர் திரு உ. ந. தேவகடாட்சம் தெரிவித்தார்.

### அணுஆயுதங்களுடன்

# வெடித்துச் சிதறிய 'பி-52' விமானம்!

நியூயோர்க், டிச. 5

அமெரிக்க விமானப்படைத் தளமான மெர்செட்டின் (கலிபோர்னியா) ஓடுபாதையில் 'பி-52' குண்டுவீச்சு விமானம் ஒன்று வெடித்துத் தீப்பற்றி எரிந்தது. ஆனாலும் அதில் இருந்த ஒன்பது பேரும் காப்பாற்றப்பட்டனர்!

இந்த விமானம் வெடித்து எரிந்தபோது, அதில் அணுவாயுதம் இருந்ததா என்பதை உறுதிப்படுத்த இத்தளத்தின் பேச்சாளர் ஒருவர் மறுத்து விட்டார். அதேவேளையில் அணுவாயுதம் இருந்தது என்ற கூற்றை அவர் மறுக்கவுமில்லை.

இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்த உயர்அதிகாரி ஒருவர்; அணுவாயுதங்களை எடுத்துச் செல்லும் விமானம் வெடித்தது இதுதான் முதல்தடவையல்ல என்று கூறினார்.

1980 செப்டம்பர் 15ம் திகதி ஓடுபாதையில் இருந்து மேலெழுவதற்குச் சற்று முன்னர், அணுவாயுதங்களைக் கொண்ட ''பி 52'' விமானம் வெடித்துச் சிதறியது. அதே ஆண்டு அக்டோபரில் எப்-111' விமானம் இதே ஆயுதங்களுடன் அமெரிக்காவின் கிழக்குக் கரையருகே மோதிச் சிதறியது.

அணுவாயுதங்களுடன் இத்தகைய விமான விபத்துக்கள் இதுவரை 200 நடைபெற்றுள்ளன என்று ''மதர் ஜோன்ஸ்'' எனும் சஞ்சிகை எழுதுகிறது.

### கோவில் நிர்வாகம்:

# உயர் நீதிமன்ற தீர்ப்பை அமுல் செய்ய உத்தரவு

(மாவிட்டபுரம்.)

கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முகாமைத்துவம் தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை உடனடியாக அமுல் செய்யுமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவிலின் ஏகதர்மகர்த்தாவாகவும் மனேஜராகவும் தம்மை தீர்மானிக்கும்படியும், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட குறித்தகோவிலின் முகாமைத்திட்டத்தின்படி 14-4-78 லிருந்து தாமே கோவிலின் பூசைக்கு உரித்துடையவரெனப் பிரகடனப்படுத்துமாறும் கோரி வைத்திலிங்கம் குமாரசாமிக்குருக்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் இரு மனுக்களைத் தாக்கல் செய்துஅதில் எதிர்மனுதாராக சுப்பிரமணியம் சிவசண்முகானந்தக்குருக்களை குறிப்பிட்டிருந்தார்.

மனுக்களை விசாரணைசெய்த மல்லாகம் நீதிபதி முதலாவது மனுவை நிராகத்து. இரண்டாவது மனுவில் கோரியபடி மனுதாரான குமாரசாமிக் குருக்கள் மேற்படிகோவிலின் மனேஜராகவும், முகாமையாளராகவும், பூசகராகவும் உடனடியாக அமர்த்தப்படவேண்டுமெனவும், அதனை அவர் ஒரு ஆண்டுக்கு அனுபவிக்கலாமெனவும், அவ்வாறு அனுபவிப்பதை எதிர்மனுதார்தடை செய்யக்கூடாதெனவும் தீர்ப்பளித்திருந்தார். இத்தீர்ப்பை எதிர்த்து எதிர்மனுதாரான சு. சிவசண்முகானந்தக்குருக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டு விண்ணப்பம் ஒன்றைச் செய்தார். இவரது மேன்முறையீட்டை ஆராய்ந்த நீதிமன்றம் மல்லாகம் நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பை நிராகரித்து மேற்படி மனு நம்பிக்கைப் பொறுப்புச்சட்டம் 101 (2) அல்லது 102 பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது அல்லவெனவும்தீர்ப்பளித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மனுதாரான குமாரசாமிக்குருக்கள் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ததையடுத்து பிரதமநீதியரசர் திரு. நெவில் சமரக்கோன், நீதியரசர் வனசுந்தர நீதியரசர் ஆசா ஆகியோர்கொண்ட உயர் நீதிமன்றம் இதுபற்றி ஆராய்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பைபுறம்வைத்து தனது தீர்ப்பை வழங்கியது.

மனுதாரின் மனுவானது நம்பிக்கைப் பொறுப்புச்சட்டம் 101 (2) இன்கீழ் செய்யப்பட்டதாகவே கருதப்பட வேண்டுமெனவும், குறித்த பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றத்திற்கு தருமசொத்துக்களின் பாதுகாவலன் என்ற வகையில் தரும சொத்துக்களை நெறிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும், வழி உரித்தாளர்களை நியமிக்கவும், அவை தொடர்பாக நீதியானதெனக் கருதும் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் போதிய அதிகாரமுண்டென்றும் தனது தீர்ப்பில் தெரிவித்த உயர்நீதிமன்றம் மனுதாரான குமாரசாமிக் குருக்களை மேற்படி கோவிலின் ஆட்சியில் அமர்த்தவேண்டுமெனவும், அவ்வாறு அமர்த்தப்பட்டதிலிருந்து 3 வருடத்திற்கு தொடர்ச்சியாக அவர் முகாமைத்தர்மகர்த்தாவாக செயல்படவேண்டுமெனவும், 3 வருடமுடிவின் பின் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்திட்டத்தின் படிதர்மகர்த்தாக்களுக்கு வழங்கப்பட்ட ஆண்டுக்கொருவராக செயல்படும் முறை அமுலுக்கு வரவேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு மல்லாகம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதையடுத்து நீதிமன்றத்தில் அது எடுக்கப்பட்டது நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் அத்தீர்ப்பைவாசித்துஅதனை அமுல் நடத்தும்படி உத்தரவிட்டார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் மனுதாரின்சார்பில் சட்டத்தரணி வி.எஸ். கணேசலிங்கத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி அ. முத்துக்கிருஷ்ணனும், உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி எஸ். நவரத்தினத்தின் அனுசரணையுடன் கே. தேவராஜாவும் ஆஜராகினர். எதிர்மனுதார் சார்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ச.தர்மலிங்கத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. அருளம்பலமும், உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி எஸ். ஏ பரதலிங்கத்தின் அனுசரணையுடன் வி. அருளம்பலமும் ஆஜராகினர்.

## பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் சர்வஜனவாக்கெடுப்பு எதிர்ப்பிரசாரக்கூட்டம் அச்சுவேலியில் டிசம்பர் 16ம் திகதி நடைபெறவிருக்கிறது.

நல்லூரில் சங்கிலியன் (?) சந்தைமைதானத்தில் டிசம்பர் 18ம் திகதியும், இறுதிக்கூட்டம் யாழ் திறந்தவெளியரங்கில் டிசம்பர் 19ம் திகதியும் நடைபெறவுள்ளன.

'ஈழநாடு' வெற்றிக்கிண்ண

# யங்றேயல் உதைபந்தாட்டப் போட்டி

# டிச 15-ல் ஆரம்பம்!

(காங்கேசன்துறை)

''ஈழநாடு'' வெற்றிக்கிண்ணத்துக்காக காங்கேசன்துறை யங்றேயல் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் பதினுன்காவது உதைபந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி இம்மாதம் 10ம் திகதி ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டி டிசம்பர் மாதம் 15ம் திகதி காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் ஆரம்பமாகின்றது. ஏற்கனவே இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு வடபகுதியைச்சேர்ந்த பல விளையாட்டுக்கழகங்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளன.

வடபகுதியில் உள்ள உதைபந்தாட்டவீரர்களின் விளையாட்டுத்திறமையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கு ''ஈழநாடு'' வெற்றிக்கிண்ணம் உட்பட 5 வெற்றிக்கேடயங்களும், 6 வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும். நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும் இச்சுற்றுப்போட்டி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

சகலபோட்டிகளுக்கும் யாழ் மாவட்ட உதைபந்தாட்டத் தீர்ப்பாளர் சங்க நடுநிலையாளர்களே கடமையாற்றுவார்கள். முதலாம் பிரிவின் பதினெருபேர் கொண்ட போட்டிகள் தவிர ஏனையபோட்டிகள் யாவும்நொக்கவுட் முறையில் நடைபெறும் இச் சுற்றுப்போட்டிக்கு வெளிமாவட்டத்தைச்சேர்ந்த விளையாட்டுக்கழகங்களும் விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளன.

யங்றேயல் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் இச் சுற்றுப்போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் செய்துவருகின்றார்.

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர். விஜயா
கிரகப் பிரவேசம்
(கலர்)

இன்று மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
பார்த்தால் பசிதீரும்

மனோகரா யாழ்.நகர்
தினசரி 10-30, 2-15, 4-45
7-00, 9-30
Death on the NILE
(Color)

## இன்றைய பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வும். புத்திர வழியால் புகழும் சேரும்.

மகரம்: கடந்தகால நினைவுகள் உங்களுக்கு கவலையைத் தரலாம். விவசாயிகளாயின் இன்று ஒரு சோதனை காலமாகும். பிறர்மீது அதிக நம்பிக்கை வைப்பதை தவிர்த்துக் கொள்ளவும் தெய்வ நம்பிக்கை வேண்டும்.

கும்பம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும்.

மீனம்: வெளியிடத்தொடர்புகளில் மந்த நிலை காணப்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர் பிரயாணத்திற்கும்இடமுண்டு. உடல் நலம்பாதிக்கப்படலாம். சுகாதாரம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கூட்டணி வெற்றி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபைக்கு கிளைக்குழுக்கள் மூலமாக 7பேரைத் தெரிவுசெய்வது தொடர்பாக இடம்பெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வெற்றிபெற்றனர்.

தெரிவானோர் விபரம் வருமாறு; திரு. சி சிவமகாராஜா, திரு. ஞா. பரமானந்தம், திருமதி குகவதி மாணிக்கவாசகர், திரு. நா. கருணானந்தசிவம், திருமதி வே. அப்புத்துரை, திரு. சி. சிவஞானம், திரு. நா. சிவராசலிங்கம். (க)

## யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்சிமுகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலைப்பந்தாட்டத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மேற்கொண்டுவருகின்றது. இதற்கிணங்க இம்மாதம் 11ம் திகதி வலைப்பந்தாட்டப் பயிற்சிமுகாம் ஒன்றைச் சங்கம் நடாத்தவுள்ளது.

இவ் வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கோப்பாய் என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(புலோ-நிரு)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
4-வது வெற்றி வாரம்!
எம், ஜி.ஆர்-லதா
நவரத்தினம்
A.P.N. இன்வண்ணப்படம்

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவகுமார் - ஜெய்சித்ரா - ஜெயசுதா
வெள்ளிக்கிழமை விரதம் (கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film. ....
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் தீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......

# மதுப்பிரியரான குடும்பஸ்தர் நஞ்சருந்தித் தற்கொலை

[மட்டுவில்]

மனைவியிடம் தாலிக்கொடியைத்தரும்படி கேட்ட கணவர் சாவகச்சேரிக்குச் சென்று திரும்பியதும் கிருமிநாசினி அருந்தி மரணமானார். இச்சம்பவம் நுணாவிலில் இடம்பெற்றது. சாவகச்சேரி பொலிஸ் சார்ஜண்ட் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளுக்காக சாட்சிகளை ஆஜர் செய்தார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என் தர்மேந்திரன் விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மகள் நேசராணி 13-வயது தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

இறந்தவர் எஸ் செல்லத்துரை (36-வயது) எனது தந்தை. அவர் இன்று காலை சாவகச்சேரியால் சைக்கிளில் உரமும், மீனும் வாங்கிவந்தார். சைக்கிளை வெளியில் விட்டார். வாங்கிவந்த மீனை சமயலறைக்குள் வைத்தார். அதைக்கறி சமைக்கும்படி என்னிடம் கூறிவிட்டுத் தன்னுடைய அறைக்குள் சென்றார்.

சிறிதுநேரத்தில் முனகல் சத்தம் கேட்டது. கிருமிநாசினி நாற்றமும் வீசியது. நான் உள்ளே சென்று பார்த்தேன். அப்பா ஒரு கையில் கிருமிநாசினிப் போத்தலுடனும் மறுகையில் கிளாசுடனும் நிலத்தில் வீழ்ந்துகிடந்தார் என்றார்

இறந்தவரின மனைவி பரமேஸ்வரி (30-வயது கூறியதாவது

எனது கணவர் ஒரு மதுப்பிரியர் அண்மையில் 1000 ரூபாய் வாங்கிச் செலவிட்டார். இறுதியாக தாலிக்கொடியைக் கேட்டார் நான் அவருக்கு புத்திமதிகூறினேன். அவர் இரவு சாப்பிடவில்லை காலையிலும் சாப்பிடாமல் சாவகச்சேரிக்குச் சென்றிருந்தார். நானும் வயலுக்குச் சென்றுவிட்டேன். பின்பு மகளின் கூக்குரல் கேட்டதும் வீட்டிற்கு ஓடிச்சென்றேன். அங்கு கணவரின் நிலையறிந்து அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். வழியில் அவர் மரணமானார் என்றார்

சாட்சியங்களைப் பதிவு செய்துகொண்ட மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். (அ)

# ''ஊனமுற்றவர்களை ஆதரிப்பவர் நெஞ்சத்தில் இறைவன் உறைவான்''

[இலுப்பைக்கடவை]

'உலகத்திலே கிடைத்தற்கரிய பிறவியைப் பெற்றுக்கொண்டநாம் கூன் குருடு, செவிடு, நீங்கிப் பிறக்கும் பேற்றினையும் பெற்றிருக்கின்றோம். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிப் பீடு நடைபோட நாம் நினைக்கும் அதே நேரத்தில் ஊன முற்றவர்களாகப் பிறந்து இருண்டுபோன எதிர்காலத்தை நினைந்து ஏங்கித் தவிக்கும் நமது சகோதரர்களையுஞ் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்

வாழவகையின்றி மற்றவர்கள் கையை எதிர்பார்த்து நலிவடைந்து கிடக்கும் துரதிஷ்டசாலிகளான ஊனமுற்றவர்களை ஆதரிப்பவர்கள் வானகத்துத் தேவர்களுக்குச் சமமானவர்களாவார்கள் ஆலயத்தில் மாத்திரம் ஆண்டவனிருக்கவில்லை. காலமறிந்து ஊனமுற்றவர்களைக் கைதூக்கிவிடும் பெருந்தகையாளர்களின் இதயத்திலும் அவன் வாழ்கிறான் என்பது சர்வ நிச்சயமாகும்''

இலுப்பைக்கடவைக் கிராமோதய சபையின் ஏழாவது தொடர் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய சபைத்தலைவர் திரு. சி. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் தொடர்ந்து பேசிய அவர் ''கள்ளியடிக் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கை, கால் வழங்காதவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் இலுப்பைக்கடவையில் ஒரே குடும்பத்தில் மூன்று சிறுவர்கள் ஊனமுற்றவர்களாக இருக்கின்றார்கள் பெற்றோர்களின் தாபரிப்பிலே வாழ்ந்துவரும் இவர்களது எதிர்காலம் எப்படி அமையப் போகிற என்பதை நாம் எண்ணிப்பார்க்காமலிருக்க முடியாது. இவர்களது வருங்கால வாழ்வை வளமுள்ளதாக மாற்றக் கிராமோதய சபை ஏற்றநடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் என்றார்.

கள்ளியடி அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர் திரு பொன் ஐயாத்துரை சிவசாமியும் பேசினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ஒரு முச்சக்கர வண்டியாவது வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண் மென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. (அ)

# ''ஆரம்பசுகாதாரத்தைப் பேண முன்வருக''

[அச்சுவேலி]

''சுகமான வாழ்வே மனித நல்வாழ்வு, இச்சுகத்தை மக்களுக்கு அளித்து நல்லசுகவாழ்வுள்ள சமூகத்தை ஏற்படுத்தவே எங்கள் அரசு இலவச சுகாதார சேவையைச்செய்து வருகிறது. இச்சுகவாழ்வுக்கு ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு அத்தியாவசியமானது'' என்று வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் கு. கிட்ணர் கோப்பாய் சுகாதாரப்பணிமனையில் நடைபெற்ற ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு சம்பந்தமான கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கை வடமாநில சுகாதார சேவைக் கண்காணிப்பாளரின் அனுசரணையுடன் கோப்பாய்ப் பிரிவுச் சுகாதார அதிகாரி ஏற்பாடுசெய்திருந்தார். இக்கருத்தரங்கிற்கு கோப்பாய் பகுதி பிரதேச அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில், 'ஆரம்ப சுகாதாரத்தைப்பேணி எமது நாட்டில் தொற்றுநோய், தொழுநோய், போன்றவற்றினை ஆரம்பத்திலேயேவராது ஒழிக்கத் தொண்டர் நிறுவனங்கள் முன்வந்து உழைக்கவேண்டும். இதன் காரணமாகத்தான் இன்றைய இக்கருத்தரங்கிற்கு சுகத்தைப் பேணும் சுகாதார இலாகாவினர் மக்களின் நலம்பேணும் சேவையாளர்களாகிய பிரதேச அபிவிருத்திச்சபை உறுப்பினர்களை அழைத்துள்ளனர் ஆகவே பிரதேச சபை உறுப்பினர்கள் தமது கிராமங்களிலும், தமது சேவைக்குட்பட்ட பகுதிகளிலும் ஆரம்பசுகாதார கவனிப்பைப்பேணி சுகவாழ்வுள்ள ஒரு சமூகத்தை ஏற்படுத்த முடிந்தளவு சேவையாற்ற முன்வரவேண்டும்'' என்றார்.

அடுத்து வடமாநிலசுகாதார சேவைக் கண்காணிப்பாளர் திரு எஸ் மாணிக்கம் உரையாற்றுகையில் ''வருங்காலத்தில் சுகாதாரசேவையில் கூடுதலான பொறுப்பை குடும்ப நலசுகாதார உத்தியோகத்தர்களேபெறஉள்ளார்கள் ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு இவர்கள் பொறுப்பிலேயே விடப்படும். கிராமங்களின் நலனில் அக்கறையுள்ள சேவையாளராகிய பிரதேச சபை உறுப்பினர்கள் குடும்பநல உத்தியோகத்தர்களுடன் இணைந்து சுகவாழ்வுள்ள ஒருசமுகத்தை ஏற்படுத்தி நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும்'' என்றார்.

இக்கருத்தரங்கில் குழந்தை வைத்திய நிபுணர் திருமதி எம். பொன்னம்பலம், கோப்பாய்வைத்திய அதிகாரி திரு எஸ். விஜயரத்தினம், டாக்டர் திருமதி எஸ் துரைசிங்கம் சுகாதார போதனாசிரியர் திரு. ஐ. வைத்தீஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். [அ]

## நாவலர் குருபூசை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இன்று நாவலர் குருபூசை கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீகணேச வித்தியாசாலையில் திரு, அ. துரைசிங்க தலைமையில் நிகழும் இவ்விழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் சிறப்புரையாற்றுவார்.

(அ)

# 'மர்ம மனிதன்' நடமாட்டம்:

## சில தகவல்கள்

(கா. யோகநாதன்)

அல்லாரையில் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணின், இடது கையில் 'மர்மமனிதன்' கடித்த காயத்தை நேரில் பார்த்தேன். அப்பெண்ணின் வீட்டில் மர்ம மனிதன் 'டைகர் ஹெட் மார்க்' இரண்டு பட்டரி டோர்ச் லைட்டையும் பிறவுண் கலர் போடர் போட்ட நீலநிற கோடுள்ள கைக்குட்டை ஒன்றையும், விட்டுச் சென்றுள்ளான். அப்பெண்ணின் கையில் மர்மமனிதனின் 8 பற்கள் பதித்திருந்த காயம் காணப்பட்டது

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நடமாடும் 'மர்ம மனிதன்' தொடர்பான சம்பவங்கள் பற்றி நேரில் அறிந்து கொள்ள நேற்றுக்காலை அல்லாரை, கச்சாய், வெள்ளாம் போக்கட்டி, மீசாலை வடக்கு, இராமாவில் ஆகிய கிராமங்களுக்குச் சென்றிருந்தேன்.

மீசாலைவடக்கு கிராமசேவை அலுவலர் திரு. க. இன்னையாவும், கொடிகாமம் ப. நோ. கூ. சங்க ஊழியர் திரு. எஸ். கணேசலிங்கமும் என்னுடன் வந்தனர்

### அல்லாரையில்

அல்லாரையில் தனியாக உள்ள ஒரு குடிசை வீட்டிற்கு சென்றேன். அங்கு 2 குடிசைகள் காணப்பட்டது. அங்கிருந்து நடுத்தரபெண் வெளியில் வந்தார். அவரிடம் மர்ம மனிதன் பற்றி கேட்டபோது முதலில் சொல்லத் தயங்கினார்.

பின் தனது பெயரை வெளியிட வேண்டாமென்று கூறி தனது வீட்டிற்கு ஒரு செவ்வாய்க்கிழமை மர்ம மனிதன் முதலில் வந்ததாகக் கூறினார்.

''விறுந்தையில் நானும் மற்றவர்களும் படுத்திருந்தோம். இரவு 10 மணி போல ஒரு உருவம் தெரிந்தது. டோச் லைட்டைக் கைக்குட்டையால்முடிய படி அருகில் ஒரு கறுத்த உருவம் நின்றது. எட்டி தலைமயிரில் பிடித்தேன். மயிரில்லாததால் பிடிபடவில்லை. சிறிது தூரம் இழுபட்டு தப்பிசென்றுவிட்டான். இது பற்றி கணவரிடம் சொன்னேன் என்றார்.

''மறுநாள் அதேநேரம் காத்திருந்தோம். அந்த உருவம், மெள்ளமெள்ள அருகில் வந்தது திடீரென்று அதன் காலைப் பிடித்துக் கத்தினேன். என் கணவர் முதுகுப்பக்கமாக பிடித்தார். அந்த உருவம் உதறிவிட்டு பாய்ந்து சென்றுவிட்டது. என் கையில் கடித்துவிட்டது'' என்று கையைக் காட்டினார்.

வீட்டில் வேறு யார் இருந்தார்கள்? என்று கேட்டேன்.

'வழக்கமாக மாமியார் விறுந்தையில் படுத்திருப்பார்' பயத்தினால் இப்ப ஒரு அறைக்குள் படுத்திருக்கிறார்'' என்றார்.

எங்கள் வீட்டிற்கு ஒழுங்கையும், வாசலும் இருக்கிறது. ஆனால் வேலிக்கம்பியை மேலே உயர்த்திக் கட்டிவிட்டு அந்த மர்ம மனிதன் வந்திருக்கிறான் என்றார்.

பொலிசிற்குப் போகவில்லையா? என்று கேட்டதும் 'இல்லை' என்றார்.

அங்கிருந்து வேறு ஒரு இடத்திற்குச் சென்றோம். அவர் பெயர் க. பஞ்சாட்சரம். அல்லாரை வாசி.

அவர் கூறுகிறார். ''நானும் மனைவியும், மற்றவர்களும் படுத்திருந்தோம். மர்மமனிதன் நடமாட்டத்தினால் நள்ளிரவு வரை நாங்கள் நித்திரை கொள்வதில்லை. இரவு 11 மணி போல் அந்த உருவம் வந்தது. நான் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த உருவம் வந்து விளக்கைத் தணித்துவிட்டது. பின்னர் தீப்பெட்டி, டோச் லைட்டை தேடி எடுத்து தூரத்தில் வைத்தது. அங்கிருந்த கத்தியையும் எடுத்து அப்பால் வைத்தது. நான் திடீரென எழுந்து குளறிக்கொண்டு துரத்தினேன். மற்றவர்களும் வந்தார்கள். 5 அடி உயர கம்பி வேலியை ஒரே பாய்ச்சலாக பாய்ந்து சென்றுவிட்டான். அப்பால் துரத்த முடியாமல் போய்விட்டது. வீட்டில் கட்டிருந்த கடி நாயையும் அவன் அவிட்டுவிட்டிருந்தார்.

பரமு விஞசித்தம்பி என்பவர் ஒரு இரவு தானும் மற்றும் பலரும் துரத்திச்சென்றதாகவும் பிடிக்க முடியாமல் போனதென்றும் கூறினார்.

அல்லாரையைச் சேர்ந்த வைரமுத்து அப்புலிங்கத்தை சந்தித்தோம். ஒரு இரவு வீட்டிற்கு வந்த மர்ம மனிதனை தான் பலமாக கட்டிப்பிடித்ததாகவும். தனது நாடியில் தலையால் இடித்துவிட்டுத் தப்பிச் சென்றதாகவும் கூறினார்.

நிற்சிங்கம் என்பவரின் வீட்டுக்கு வந்ததாகவும், வீட்டுக்காரர் குளற ஓடிவிட்டதாகவும் அவர் கூறினார்.

கச்சாயில் கந்தையா குட்டி என்பவரின் வீட்டிற்கு சென்றதாகவும், பயத்தில் குசினி கதவைப்பூட்டிவிட்டு சமைத்த போது, மர்ம மனிதன் கதவைப் பலமாகத் தட்டியதாகவும், வீட்டார் சத்தம்போட ஓடிவிட்டதாகவும், எஸ். கணேசலிங்கம் கூறினார்.

### 10 வருடத்தின் முன் தெருவாரத்தில்

தெருவாரம் என்ற கிராமத்தில் 10 வருடத்திற்கு முன் மர்மமனிதன் நடமாடியதாகவும் இதே போன்ற சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், ஒரு நாள் அப்பகுதி இளைஞர்கள் அவரைப் பிடித்து தாயாரிடம் ஒப்படைத்ததாகவும், அல்லாரையைச்சேர்ந்த வேலன் இரத்தினம் கூறினார்.

கோவில் பூசகர் சிவானந்த ஐயர் தெருவாரத்தில் நடந்த சம்பவம் தனக்கும் தெரியும் என்றும் அதேபோன்றுதான் இப்பவும்நடப்பதாகவும் கூறினார்.

மீசாலை வடக்கு வி. ரி. பொன்னம்பலம் வெள்ளாம் போக்கட்டி ரி. நேசநாதன், மீசாலை வடக்கு வி. கனகசபை மற்றும் பலர் இந்த மர்ம மனிதன் நடமாட்டம்பற்றி தெரிவித்தனர்:

இப்பகுதியில் மக்கள் மத்தியில் பீதி நிலவுகிறது. இரவில் மக்கள் நடமாட்டம குறைந்துள்ளது. இளைஞர்கள், தொண்டர்படை அமைத்து காவல் புரிந்துவருகின்றனர். [க]


ஹோம் பிறுன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி!

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


### உண்ணா...

(5-ம் பக்கத் தொடர்ச்சி]

களையும் இடைவிடாது உண்ணாவிரதக்காரர்கள் இசைத்துக்கொண்டிருந்தனர்.

''பல்லாயிரங்கோடி ஜீவர்களைப் பாவ பந்தச் சிறையினின்றும் மீட்க விடுதலை வழிகாட்டிய வித்தகர் இயேசுவின் வழியினிலே...

''ஆதவன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தையே ஆட்டம் காணச் செய்த அண்ணல் காந்தியின் வழியினிலே...

அமெரிக்க நீக்கிரோ மக்களின் உரிமைக்காக உதிரஞ் சிந்திய உத்தமர் மாட்டின் லூதர் கிங் வழியினிலே... அமைதி வழிப்போர் தொடுத்து இந்த உண்ணாவிரத நோன்பில்கலந்திடுவீர்'' என்ற பிரசுரம் ஒன்றும் இங்கு வழங்கப்பட்டது. (மா. அ)


நத்தார் - புத்தாண்டை - முன்னிட்டு
விசேட கழிவு! விரையுங்கள்!!
சகல மரத்தளபாடங்கள் - ''ஆர்பிக்கோ'' மெத்தைகள் - குஷன் - செற்றிகள். இன்னும் பல.
டில்கா பேணிச்சர் பலெஸ்
234 - 236, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
போன்: 24186


## இப்படியும் நடக்கிறது

காலை பதினொரு மணி இருக்கும்.

தொலைபேசி அலறியது.

''ஈழநாடு'' தானே ........'' தளதளத்த குரல் ஒலிக்கிறது.

''அழவேண்டாம் விஷயத்தைச் சொல்லுங்க'' எனப் பதிலளிக்கப்படுகிறது.

''......... [ஒரு பாடசாலை அதிபரின் பெயரைக் குறிப்பிட்டு] ஹாட் அற்றேக் ஏற்பட்டது ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியில் ......... முக்கியத்துவம் கொடுங்க .........'' — பேச்சு முடிகிறது.

[சிரமம் பாராமல் இரண்டு பந்திகளில் காணப்படும் புள்ளிகளில் 'ஓ' என்று அழுதழுது கூறுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்]

தகவல் பெரிய இடத்து விஷயமாக இருந்ததால் உடனடியாகவே அங்கு மிங்கும் தொடர்பு கொண்டு பின்னர் ஆஸ்பத்திரியிலும் ஊர்ஜிதப்படுத்த முடியாத நிலையில் இறுதியில் அந்த அதிபருடனேயே பேச வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தொலைபேசி மூலம் வந்த இக் 'கொடுமை' யை விஷமத்தனம் என்பதா? பயங்கரவாதம் என்பதா?

'ஊடுருவி'

### பேராதனைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனைப் பல்கலைக்கழகநிர்வாகம் முடிவு செய்தது.

மாணவர் கைகலப்பில் பலர் காயமடைந்ததாகவும், ஐந்து மாணவர்கள் கண்டி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக எல்லைக்குள் மாணவர்கள் வருவதற்கு இப்பொழுது தடைவிதிக்கப்பட்டுள்ளது. விடுதிகளிலுள்ள மாணவர் காணவிகள் அனைவரையும் வீடுகளுக்குச் செல்லுமாறு நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

### எனது கணவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''நள்ளிரவு நேரம்வரை பார்த்தேன். அவர் வீடு திரும்பவில்லை.

''வழக்கமாக அவர் முன்னரும் வெளியே சென்றுவிட்டு நேரம் கழித்துத்திரும்புவதால் அதுபற்றி நான்அதிகம்யோசிக்கவில்லை. காலையில் சுழிபுரம் பருளாய் முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள குளத்தடியில் இவரது சடலம் கிடப்பதாக சில பாடசாலை மாணவர்கள் மூலம் அறிந்துகொண்டேன்.

''கணவர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தில் மூன்றும் கட்ட வேலைத்தளத்தில் வேலைசெய்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர்வந்து விசாரணைக்காக கணவரை அழைத்துச் சென்றிருந்தனர். இதன்பின்னரும் அவர் வெளியில் அடிக்கடி போய் வருவார். நான் இதுபற்றிக் கேட்டால், இராணுவத்தினரின் விசாரணைக்குப் போய் வருகிறேன் என்று கூறுவார். இவரது நண்பர்கள் பற்றி எனக்குத் தெரியாது. சிங்களம் பேசுவார்.''

வேறுசிலரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்குவதை பதில் நீதிபதி ஒததிவைத்தார்,

#### கடிதம்

இறந்தவரின் அருகில் கொப்பிக்கடதாசியில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. அக்கடிதத்தில், ''இயக்கத்தைக் காட்டிக் கொடுப்போருக்கு இந்தக் கதியே நடக்கும் என்றும் தொடர்ந்தும் இயக்கத்தைக் காட்டிக் கொடுப்போருக்கு இந்த முடிவு ஏற்படும்'' என்றும தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரேத பரிசோதனையில் இறந்தவர் பிடரிவழியாகச் சுடப்பட்டு முன்நெற்றியால் குண்டு பாய்ந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது

### ஊர்வலமாக--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. மல்லாகம்-குளமன்கால் பங்குத்தந்தை வணபிதா எட்மன் மைக்கேல் அடிகளார் ஆராதனை நடாத்தினார். ஆராதனை முடிந்த பினனர் ஊர்வலம் ஆரம்பமானது.

சிறுவர்கள் முதல் பெரியோர் வரை ஆண்களும்பெண்களுமாக இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். [illegible]ளம் பெண்களே அதிகம் காணப்பட்டனர்.

இந்த ஊர்வலம் மல்லாகம் சந்தியை வந்தடைந்தபோது, சுமார் 30 நிமிடங்களுக்குமேல் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

சதாசகாயமாதா கோவிலிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் மல்லாகம் பிள்ளையார் கோவிலை அடைந்ததும், கோவில் பிரதமகுரு முதுதையாக்குருக்கள நாகேந்திரசர்மா விசேடபூசை நடத்தி உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். பிற்பகல் நான்கு மணிவரை உண்ணாவிரதமிருந்தனர். பிள்ளையார் ஆலய முன்றலில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சுலோக அட்டைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. காங்கேசன்துறை-யாழ்ப்பாணம் பிரதானவீதியில் உண்ணாவிரதம் நடைபெற்றதால், ஏராளமானோர்பார்த்துச் சென்றனர்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அனுதாபம் தெரிவித்தார். உண்ணாவிரதத்தையொட்டி இப்பகுதியிலுள்ள கடைகள் மூடப்பட்டிருந்தன. (மா)

### மாங்குளத்தில் வெள்ளம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ள நிலைமை இறிது சிறிதாகச் சீரடைந்து வருகிறது. ஆனாலும் சில பகுதிகளில் போக்குவரத்து செய்ய முடியாது வெளளம் தேங்கி நிற்கிறது.

யாழ்ப்பாணம் - கண்டிவீதியில் மாங்குளம், புலியங்குளம் பகுதிகளில் வீதிக்கு மேலாக 3 அடிக்கு வெள்ளம் நிற்கிறது.

மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாடசாலைகளில் தஞ்சமளிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் சமூக சேவைத் திணைக்களம் நிவாரணப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under num[ber] Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.